Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU





முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 14 சனிக்கிழமை (29.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 090











# புனர்வாழ்வு பெறத்தவறிய புலிகள் ஆயிரம் பேர் மீது நடவடிக்கை

## "திவயின" நாளிதழ் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்ட போதிலும், இது வரை புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படாத சுமார் ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்கள் வடக்கில் உள்ளதாகவும் இவர்கள் படிப்படியாகக் கைது செய்யப்பட்டுப் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் படை அதிகாரிகளை மேற்கோள் காட்டி சிங்கள செய்தி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களைக் கைது செய்யும் நோக்கில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டு செயற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களே இவ்வாறு கைது செய்யப்பட உள்ளனர். புனர்வாழ்வு அளிக்கப்படாத, சரணடையாத மற்றும் கைது செய்யப்படாதவர்களே இவ்வாறு கைது செய்யப்பட உள்ளனர் என்றும் சிங்கள ஊடகமான திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் புலி உறுப்பினர்கள் பாதாள உலகக் குழுக்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர் என்றும், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட 48 புலி உறுப்பினர்கள் ஏற்கனவே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவி

(19) ஆம் பக்கம் பார்க்க

## மானிப்பாயில் இளைஞர் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்ப் பகுதியில் வைத்து நேற்று இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். நடராசா கலியுகராசா என்பவரே கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக இவரது உறவினர்களால் நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய்ப் பகுதியில் வீதியில் சென்று கொண்டிருந்த வேளை இரண்டு முச்சக்கர வண்டியில் வந்தவர்கள் இவரைக் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

## வெள்ளப்பாதிப்புக்கு நிவாரணம் முடுக்கிவிடப்பட்டுள்ளது மீட்புப் பணி

### சந்திரகுமார் எம்.பி. தலைமையில் அவசர மாநாடு

கிளிநொச்சியில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசரகால வேலைத்திட்டம் உடனடியாக செயற்படும்வகையில் முடுக்கி விடப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் நேற்று நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலைத் தொடர்ந்து நிவாரண நடவடிக்கைகள் உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளன.

மழை வெள்ள அனர்த்தத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு நிவாரணமளிக்கும் வகையிலும் அனர்த்தம் தொடருமிடத்து அதிலிருந்து மக்களை பாதுகாக்கும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் தொடரும் வெள்ள அனர்த்தம் நாற்பதாயிரம் மக்கள் பாதிப்பு

### நிவாரணப் பணிகள் தீவிரம்

(முல்லைத்தீவு)

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 181 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 832 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லை மாவட்டச் செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 143 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 359 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 317 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 82 பேர் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 147 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 796 பேர் பாதிக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## முடிவுக்கு வந்தது பணிப் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை வைத்தியர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொண்டு வந்த ஒரு மணி நேர பணிப்புறக்கணிப்பு நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு யாழ்.போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணர் திருமாறன் இனந்தெரியாதவர்களின் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த சம்பவத்தைக் கண்டித்தும் வைத்தியர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## காவடி எடுத்தவர் மயங்கி விழுந்து மரணம்

### காரைநகரில் சோகம்

(காரைநகர்)


காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன் ஆலயத்திற்கு பாற் காவடி எடுத்துச் சென்ற அடியவர் ஒருவர் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

காரைநகரைச் சேர்ந்தவரும், தற்போது நீர்கொழும்பில் வசித்து வருபவருமான சண்முகம் சபாநடேசன் (வயது-54) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரணமடைந்துள்ளார். மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## கவனத்தை ஈர்த்த "சில்ப" கண்காட்சி - 2012

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் சில்ப-2012 கண்காட்சியும், விற்பனைச் சந்தையும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்திலுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சிக் கூடத்தில் நேற்று முன்தினம் சம்பிரதாயப் பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்



பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றிய நகர அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி மகிந்த சிந்தனைக்கமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிறந்த தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலுடன் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிற் துறைகள் நாடளாவிய ரீதியில் மிகவும் சிறப்பான முறையில் மேம்பாடு அடைந்து வரும் அதேவேளை, அதனூடாகக் கிராமிய

(19) ஆம் பக்கம் பார்க்க

## நான்கு வயதுச் சிறுமி சடலமாக மீட்பு

மண்டைதீவுப் பகுதியில் காணாமல் போன நான்கு வயதுச் சிறுமி கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மண்டைதீவு இரண்டாம் வட்டாரத்தில் வசித்து வந்த குலசேகரன் சுடரினி (வயது-4) என்ற சிறுமியே இரண்டாம் வட்டாரத்திலுள்ள கிணறு ஒன்றிலிருந்து நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டார். இது தொடர்பாக மேலதிகமாக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இது தொடர்பாக முன்னர் வந்த செய்தி 7 ஆம் பக்கத்தில் உள்ளது) (பா, 25)

# சுபீட்சமான வாழ்வு நிலைபெற சபதம் எடுத்துக்கொள்வோம்




இயேசு பிரான் அவதரித்த புனித நன்நாளில் நாம் அனைவரும் நம்மிடையே நிலவிவரும் பகைமை, குரோத உணர்வுகளைக் கைவிட்டு நாட்டில் நிலையான சமாதானத்துடனும் அனைத்து மக்களும் சுபீட்சமான வாழ்வு நிலைபெற நாம் அனைவரும் இத்தருணத்தில் சபதம் எடுத்துக் கொள்வோம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்தார்.

நேற்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய தலைமைக் காரியாலயத்தில் யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாலச்செல்வம் தலைமையில் நடைபெற்ற ஒளிவிழா நிகழவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய கோப்பாய் பிரதேச அருட்பணி பங்குத்தந்தை பி.வின்சன் நாட்டில் தற்போது சாந்தி, சமாதானம நிலை பெற்றுள்ளதுடன் மக்கள் அமைதியாகவும் சந்தோசமாகவும் வாழ்க்கையை முன்னெடுத்துவரும் இவ்வேளையில் வடமாகாணத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை நாம் அனைவரும் கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளதுடன் வீதி அகலிப்பு பணிகள் கட்டுமானப் பணிகள் மீள்குடியேற்றத் திட்டங்கள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் 2009 இற்கு முனபிருந்த நிலைமாறி எமது நாட்டில் அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழும் நிலமை உள்ளது. இதனை இனிவரும் காலங்களில் பாதிக்காத வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். இறைமகன் இயேசுபிரான் பிறப்பும் துன்பங்களில் இருந்துதன் மக்கள் மீண்டெழ வேண்டும் என்பதே ஆகும் எனவே 2013 அனைவருக்கும் நமபிக்கையான வாழ்வு ஒழிரட்டுமெனத் தெரிவித்தார்.

இ.போ.ச வடபிராந்திய யாழ். சாலை கோண்டாவில் தலைமையகத்தில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக உரும்பிராய் புனிதமிக்கேல் ஆலய பங்குத்தந்தை அருட்பணி அ.யூட்நிக்சன் யாழ். எக்காளத் தொனி போதகர் சி.டானியல் சந்திரேஸ்வரன், லாலா சோப் உரிமையாளர பி.வன்னியசிங்கம் கோண்டாவில் பிரதேச மக்கள எனப் பலர் கலந்துகொண்டனர்.

## உள்வீதிகள் சேதம்

(மல்லாவி)

கனமழையை அடுத்து முல்லைத்தீவின் பல பிரதேசங்களிலுள்ள உள்ளக வீதிகள் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் இதனால் போக்குவரத்துச் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேசத்திலுள்ள சில உள்ளக வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் இதனூடாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக மழை காலத்திற்கு முன்னரே குறித்த வீதிகள் சேதமடைந்திருந்த நிலையில் இவற்றைப் புனரமைக்க உரியவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் தற்போது பெய்துவரும் அடை மழையால் வீதிகள் கடும் சேதமடைந்துள்ளன.

இதனால் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை பாலியாறு, பூவரசன்குளம், பொன்நகர், விநாயகபுரம், ஆகிய பகுதிகளை ஊடறுத்துப் பாய்வதால் தாழ் நிலப் பிரதேசங்கள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இப்பிரதேசங்களிலுள்ள மக்களும் பாதுகாப்பாக நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (140)

## கலந்துரையாடல்

(குருநகர்)

கற்றுக்கொண்ட பாடங்களும், நல்லிணக்கமும் சம்பந்தமான ஆணைக்குழுவின் பரிந்துரைகள பற்றிய ஓர் பார்வை கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு வட்டுக் கோட்டை மேற்கு சந்தை வளாக காந்தீஜி சனசமூக நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை சமூக ஜனநாயக மன்றம் ஏற்பாடு செயதுள்ள நிகழ்விற்கு இ.கு.சிவஞானம், ஜே.பி. தலைமை தாங்குவார். ..வள அறிஞராக ஆசிரிய ஆலோசகர் ஏ.சி.ஜோர்ஜ் கலந்து கொள்வார். (68)

## ஒளிவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி புனித லிகோறியார் ஆலய ஒளிவிழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்பணி ஜே.ஜி.போல் றொகான கலந்து சிறப்பிக்கவுள்ளார். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழவுகள் இடம்பெறவுள்ளது.

# தண்ணீர் தொட்டியில் வாழ்ந்தவர் முதியோர் இல்லத்திற்கு வருகிறார்

(திருநெல்வேலி)

தண்ணீர் தொட்டியொன்றில் வாழ்ந்து வந்த 63 வயது முதியவர் ஒருவர் இறுதியில் தன்னால் இயலாத கட்டத்தில் கைதடி அரச முதியோர் இல்லத்தை நாடியுள்ளார்.


பருத்தித்துறையைச் சேர்ந்த இராமச்சந்திரக் குருக்கள் ஆனந்தசுப்பிரமணிய சர்மா என்னும் இவ் வயோதிபர் வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தவராவார். ஊன்றுகோல் ஒன்றுடனேயே இவரால் நடமாடமுடிகிறது.

இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் எட்டி யாந்தோட்டையில் அதிக காலம் வாழ்ந்து விட்டுத் தற்போது பருத்தித்துறையில் வசித்து வருகின்றார்.

இவர் வசித்துவரும் தண்ணீர்த் தொட்டியுள்ள காணி தன்னுடையது எனவும் அதனை ஒருவர் வேறு ஒருவருக்கு விற்றுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஊரவர்கள் இவருக்கு உணவு கொடுத்து வந்துள்ளனர். 84 வயதில் இவருக்கொரு சகோதரி உள்ளார்.

இவருக்குக் கல்யாண மாகவில்லை. உறவினர்கள் என வேறு எவரும் இல்லை எனக் கூறுகின்றார். மழை, வெயில் காலங்களில் காட்போட் மட்டை யினால் தொட்டியை மூடிக்கொண்டுள்ளார்.

பகுதிக் கிராமசேவையாளர், பிரதேச செயலர், சமூகசேவை உத்தியோகத்தர் ஆகியோர் இவரது பரிதாப நிலைபற்றி முதியோர் இல்ல அத்தியட்சகரிடம் தெரிவித்ததையடுத்து எதிர்வரும் தை மாதம் முதலாவது வாரத்தில் இம் முதியவரை இல்லத்தில் சேர்த்துக்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. (137)



வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலய தீர்த்தக்கேணிக்குள் நேற்று முன்தினம் இரவு வீழ்ந்து மரணமானதாகக் கூறப்பட்ட தியோகு அன்ரன் (வயது - 66) என்பவரின் உடல் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டு உரிய முறையில் மீட்கப்பட்டபோது. (25)


### கேள்வி அறிவித்தல்
**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

ஊர்காவற்றுறை மரக்கறிச் சந்தைக் கட்டட நிர்மாணம் தொடர்பில் 27.12.2012 அன்று தினக்குரல், தினமுரசு பத்திரிகையில் வெளியான கேள்வி அறிவித்தலில் விடயம் 7 இல் 14.01.2013 என குறிபபிடப்பட்ட திகதிகள் யாவும் 15.01.2013 என திருத்தப்பட்டுள்ளது.

ம.ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

(C2236)


## கடல் கொந்தளிப்பு; மீனவர்கள் பாதிப்பு

(வடமராட்சி)

கனமழையினால் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பு கொந்தளிப்பாகக் காணப்படுவதாகவும் இதனால் அப்பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியாக விடாது பெயதுவரும் மழையினால் இப்பிரதேச மக்களும் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளனர்.

வெள்ளம் குடியிருப்புகளுக்குள் புகுந்த நிலையிலும் மக்கள் ஓரளவு தமது வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். எனினும் இம்மழை தொடருமாக இருந்தால் மக்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவும் கடற்காற்றும் கடுமையாக வீசுவதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (38)


### திருமறைக் கலாமன்றம்

அனைத்து அங்கத்தவர்களுக்குமான வருடாந்த ஒன்றுகூடல்
காலம் :- 30.12.2012 ஞாயிற்றுக்கிழமை (நாளை)
நேரம் :- மாலை 5.00 மணி
இடம் :- கலைத்தூது கலையகம், 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.

செயலாளர்,
திருமறைக்கலாமன்றம்,
யாழ்ப்பாணம்.

(C2243)


## ஒன்றுகூடல்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி நகரசபையின் ஊழியர் நலன்புரிச்சங்க வருடாந்த ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நுணாவில் எலைற் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (11)

## நீண்டகால்மாகத் திருத்தப்படாத ஆவரங்கால் சிவன் வீதி

(அச்சுவேலி)

ஆவரங்கால் சிவன் வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாததனால் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பருத்தித்துறை வீதியில் இருந்து, நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திற்குச் செல்லும் வீதி திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுவதனால் மழை காலத்தில் பாதைக்கான அடையாளமே அற்று குளம்போல் சாட்சியளிப்பதாக அப்பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி அகலிப்புச் செய்யும் பொருட்டு பிரதான வீதியின் உயரத்தினை மேம்படுத்தியதால் வீதியின் இரு பகுதிகளும் பள்ளம் போல் தேன்றின. தற்போது மழை காலம் நீடிப்பதால் நீர் வழிந்தோட முடியாது வீதியி



னைச் சூழ்ந்து காணப்படுகின்றது. இதனால், பாடசாலை செலவோரும், ஏனைய மக்களும், துவிச்சக்கர வண்டியினை உருட்டிச் செல்கின்றனர்.

மேலும் புத்தூர் பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் காணப்படும் இவ் வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேல், கவனிப்பாரற்றுக் காணப்படுவதாகவும், அதிகாரிகளுக்குப் பல தடவைகள் எடுத்துக் கூறியும் அவரகள் கண்டும் காணாதவாறு இருப்பது கவலையளிப்பதாக அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (15)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

உறுப்புரை - 25

1. ஒவ்வொருவரும் உணவு, உடை, வீட்டு வசதி, மருத்துவக் கவனிப்பு, அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட தமதும் தமது குடும்பத்தினரதும் உடனலத்துக்கும், நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத் தரத்திற்கு உரிமையுடையவராவர். அத்துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும், வாழ்க்கைக்கு வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்புக்கும் உரிமையுடையவராவர்.

2. தாய்மை நிலையும், குழந்தைப் பருவமும் விசேட கவனிப்பிற்கும் உதவிக்கும் உரித்துடையன. சகல குழந்தைகளும் அவை திருமண உறவினுட் பிறந்தவையாயினுஞ் சரி, அத்தகைய உறவின்றிப் பிறந்தவையாயினும் சரி சமமான சமூகப் பாதுகாப்பினைத் துய்க்கும் உரிமையுடையன.

# தாய் சேய், குழந்தைகள் மரணம்
# யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழில் அதிகரித்துவரும் தாய் சேய் குழந்தை மரணம் தொடர்பான விசாரணைகள் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப் படாத நிலையில் யாழ். நீதிமன்றில் பொதுநல வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறி தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் தாய் சேய் குழந்தை மரணங்கள் தொடர்பிலான 13 சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் பல மரணங்கள் தவிர்த்திருக்க கூடியவையே என அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவ்விடயங்கள் குறித்து உரிய அமைச்சுக்களோ, வைத்தியசாலை நிர்வாகத்தினரோ உரிய காரணங்களை கண்டறியவில்லை. இறப்பு வீதத்தினை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

இவ்வாறான தாய், சேய் குழந்தை மரணங்கள் சமூகத்தில் பெருமளவு தாக்கத்தினை ஏற்படுத்தும்.

ஏனெனில், தாய் சேய், குழந்தைகள் சமூகத்தில் மனித வள உற்பத்தி மையமாக கருதப்படுகின்றன. இம்மரணங்கள் அதிகரித்துச் சென்றால், எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் அடர்த்தி குறைவடைந்து செல்லும்.

இதன் காரணமாக எமக்கு கிடைக்கும், அரசியல், சமூக பொருளாதார உரிமைகள், மறுக்கப்படும். இதன் காரணமாக எதிர்காலத்தில் தமிழ் சமூகத்தின் அடர்த்தி மேலும் குறைவடைந்து செல்கின்றது என்பது தவிர்க்க முடியாதாகும்.

எனவே, இவ்விடயத்தில், அரசியல் தலைமைகளும் புத்திஜீவிகளும் தொண்டு நிறுவனங்களும் உரிய கவனம் செலுத்தி தாய், சேய், குழந்தைகளின் மரணங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

எதிர்கால சமூகத்தின் நலனிற்காகவே இப்பொதுநல வழக்கை தாக்கல் செய்யவுள்ளேன் என அவர் மேலும் கூறினார். (25)

## மருத்துவர் மீது வாள்வெட்டு சந்தேகத்தில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் காது, மூக்கு மற்றும் தொண்டை தொடர்பிலான சத்திரசிகிச்சை நிபுணர் திருமாறன் மீது வாள்வெட்டு மேற்கொண்டதாக கூறப்படும் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் மீதான வாள்வெட்டு சம்பவம் கந்தர்மடம் சந்தியில் கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 9.45 மணியளவில் இடம்பெற்றது. இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் ஒருவரையே பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

கையில் வெட்டுக்காயம் ஏற்பட்ட நிலையிலேயே சத்திர சிகிச்சை நிபுணர் திருமாறன் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (25)

## சீட்டிழுப்பு

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலக அபிவிருத்திக் குழுவின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக வாசகர்களிடையே விற்பனை செய்யப்பட்டு வரும் அபிவிருத்தி இலாபச்சீட்டின் அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வு எதிர்வரும் 1 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நாவற்குழி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நூலகர் அறிவித்துள்ளார். (11)

## உள்ளூரிலிருந்து வேறு கிராமங்களுக்கு கால்நடைகளைக் கொண்டு செல்லத்தடை

(வேலணை)

கிராமத்தில் இருந்து வேறு ஒரு கிராமத்துக்கு கால்நடைகளைக் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஒரு கிராமத்திலிருந்து வேறு ஒரு கிராமத்துக்கு கால்நடைகளைக் கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்டு வருகின்ற அனுமதிப்பத்திரங்களையும் வழங்கக்கூடாது என சகல பிரதேச சபைகளுக்கும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மா.ஜெயவினால் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள கால்நடைகளைக் கொண்டு செல்லும் பேரது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளையும் பின்பற்றுவதற்கான சுற்றறிக்கையும் பிரதேச சபைகளிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் 3.30 மணி வரை வடமராட்சி வலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

புதிய வருடத்திற்கான 5 ஆண்டுத் திட்டம், நேரசூசி அங்கீகரித்தல் மற்றும் மாணவர்களின் பாடவிதான அடைவு மட்டத்தை உயர்த்துதல் தொடர்பான விடயங்கள் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் நடத்தப்படவுள்ளது.

அதிபர்களை தவறாது சமூகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (109)

# வெள்ள அனர்த்த உதவிகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்

## - பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

தொடரும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள கனமழையால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில் இவ்வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தாலும் ஏனைய பொது அமைப்புக்களாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வழங்கப்படும் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக அனைத்துப் பிரதேசங்களிலும் மழையினால் மக்கள் பாடசாலைகளிலும், பொது மண்டபங்களிலும் தங்கவைக்கப்பட்ட நிலையில் இம்மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் முழுமையாக அனைத்து மக்களுக்கும் வழங்கப் படுவதில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அன்றாடம் கூலி வேலை செய்வோர் முதல் சகல மக்களும் தொழில் செய்ய முடியாது மழையினால் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதுடன் குறிப்பாக லொறி, லான்மாஸ்டர் வைத்திருப்போரும் தொழிலை மேற்கொள்ள முடியாது பாடசாலைகளிலும் மண்டபங்களிலும் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் பாரபட்சமற்ற முறையில் சகல மக்களையும் சென்றடைய கிராம அலுவலர்கள் பொது அமைப்புக்கள் கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். (77)

## கிளிநொச்சியில் விபத்து ஏழுபேர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற வீதி விபத்தில் 7 பேர் காயமடைந்ததுள்ளனர்.

காலை 10.30 மணியளவில் கிளிநொச்சியில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு பூநகரி நோக்கி பயணித்த பேரூந்தும் பரந்தன் பகுதியில் வந்த டிப்பர் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பரந்தன் பகுதியில் வந்த டிப்பர் மற்றொரு டிப்பரை முந்திச் செல்லமுற்பட்டபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் பேரூந்தில் பயணித்த 7 பேர் படுகாயமடைந்துள்ளனர். (02)

## வேலணை செட்டிபுலம் கிராமத்துக்கு மின் இணைப்பு வழங்க ஏற்பாடு

(வேலணை)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வேலணை செட்டிபுல கிராமத்தில் மின் இணைப்பு வழங்கப்படாதிருந்த இடங்களுக்கு மின் இணைப்புக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை எந்திரி ஐ.குணசீலன் மேற்கொண்டுள்ளார்.

மின் இணைப்புக்களை வழங்குவதற்கு முதற்கட்ட வேலைகளாக குழி தோண்டுதலும், மின்சார தூண்களை நடுகை செய்யும் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

முன்னர் இக்கிராமத்தில் மின்சார வசதிகள் இல்லாத மக்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் தற்போது இக்கிராம மக்களுக்கு மின் விநியோகத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் மக்கள் பெரும் நன்மையடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)



புற்றளை மகா வித்தியாலயத்தின் சாதனை மாணவர் கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது பிரதி அதிபர் எஸ்.விக்னேஸ்வரமூர்த்தி வரவேற்புரையை நிகழ்த்துவதையும், பிரதம விருந்தினரான இளைப்பாறிய சங்கீத ஆசிரியை திருமதி இந்திராணி பத்மநாதன் சாதனை மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)

வெற்றி என்பது ஒவ்வொரு முறையும் முதல் இடத்தைப் பெறுவது என்று பொருள் அன்று. வெற்றி பெற்றாய் என்றால் உன் செயல்பாடு சென்ற முறையை விட இம்முறை சிறப்பாக அமைந்துள்ளது என்று பொருள்.

- லியோ டால்ஸ்டாய்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நமக்காக நம் கையால் செய்வது!

தோல்விகள், இயலாமைகள், சறுக்கல்கள், துயரங்கள் எல்லாவற்றுக்கும் காரணங்களை வெளியே தேடுவதும், கண்டு பிடித்துப் பழியை அவர்களிடமோ அவைகளிடமோ போட்டு விட்டு, நம்மைக் குற்றமேதும் அற்றவர்களாய் உணர்வதில் நிம்மதியடைவதும் பொதுவான மனித இயல்பு. எங்கள் வெற்றிகளையெல்லாம் எங்களது தோள்களிலேயே ஏந்திக்கொள்ளும் நாம், தோல்வி நெருங்கும்போதே சுட்டுவிரலைத் தயாராக்கிக் கொள்கிறோம், மற்றவர்கள் மீது பழியைப் போட!

நமது செயல்களுக்கான, அதனாலுண்டான விளைவுகளுக்கான முழுப் பொறுப்பையும் நாமே எடுத்துக் கொள்வது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. அதற்கு மன உறுதியும், தைரியமும், தன் மீது வைக்கும் அழுத்தமான நம்பிக்கையும் வேண்டும். தன்னுள்ளேயே குற்றங்களைத் தவறுகளைத் தேடும் சுயவிமர்சன மனப்பண்பும், அதை வெளிப்படுத்தும் ஓர்மமும் வேண்டும்.

ஆனால் அதன் மூலம்தான் நாம் தவறுகளிலிருந்தும் தோல்விகளிலிருந்தும் மீண்டு வெளியே வர முடியும். நமது செயல்களுக்கான விளைவுகளின் பொறுப்பை நாமே எடுத்துக் கொள்ளும் போது தான் நமது அடுத்த நகர்வு வெற்றியை நோக்கியதாக மாற முடியும். தடுக்கி விழுந்ததுக்கு கல்லைத் திட்டிக் கொண்டிருப்போம் என்றால், எழுந்து கவனமாக நடப்பதற்கான உந்துதல் நமக்குக் கிடைக்கப் போவதில்லை.

உறவுகளுக்குள்ளேயே பார்த்தால் கூட, எனக்கும் என் சகோதரர்களுக்குமிடையே இணக்கம் இல்லாததற்கு யார் காரணம்? என் பெற்றோருடன் பிணைப்பு இல்லாததற்கு யார் காரணம்? நண்பர்களுடன் நட்பு இல்லாததற்கு யார் காரணம்? அவர்களைக் குறை கூறும் முன், 'நானும் இதற்கு ஒரு காரணமா?" என நிதானித்தால் போதும். அதுவரை நம் மனதிற்குத் தெரியாத ஏராளம் விஷயங்கள் தெரியவரும்! சட்டென்று மனம் திறந்து கொள்ளும்!

பொதுவாக நாம் நமது தோல்விகளுக்கான காரணங்களை வெளியேதான் தேடுவோம். நமது சோகத்துக்குக் காரணம் நண்பன், கோபத்துக்குக் காரணம் மனைவி, ஏமாற்றத்துக்குக் காரணம் மேலதிகாரி, துன்பத்துக்குக் காரணம் பிறரெல்லோரும் என்றுதான் சொல்லிக் கொண்டிருப்போம்; சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

'உங்கள் தோல்விகளுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுங்கள். அவற்றை அரவணையுங்கள். உங்கள் தோல்விகளுக்கான பொறுப்பையும் நீங்களே எடுத்துக் கொள்ளும் போது உங்களுக்கு வெற்றி சர்வ நிச்சயம்' என்கிறார் ரோல்ப் மார்ஸ்டன் என்ற அறிஞர். தோல்விகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளும் போதுதான் உங்களுடைய மன அழுத்தமும் குறையும். வெற்றியை நோக்கிப் பயணிக்க உங்களுக்கு ஊக்கமும் கிடைக்கும். இல்லையேல் யாரைக் குறை சொல்லலாம் என தேடுவதிலேயே ஒட்டு மொத்த சக்தியும் வீணாகிவிடும் என்கிறார் அவர்.

நமக்குள்ளே தேடி நமது தோல்விகளுக்கான காரணங்களை ஆராயத் தொடங்கினால் விடைகள் வித்தியாசமாக வரும். நமது வீம்போ, பொறுமையின்மையோ, விளக்கமின்மையோ, பிழையான நம்பிக்கைகளோ எதுவோதான் காரணமாக இருந்திருக்கிறது என்பது தெரியவரும்.

நமக்குள் இருக்கும் பிழைகளைத் தானே நாம் சரி செய்ய முடியும்! நமது வெற்றி தோல்விக்கான நாணயக்கயிறு பிறரிடமோ, சூழ்நிலையிடமோ இருக்கிறது என நாம் கருதிக் கொள்ளும் காலம் வரை நமது வெற்றியை நாம் உருவாக்க முடியாது.

'நானே பிரச்சினை" எனப் புரிந்து கொள்பவர்கள் 'என்னால் தான் தீர்வு" என்பதையும் அறிந்து கொள்வார்கள்.

- ஆசிரியர்

# மன்னாரில் அவசரகாலநிலை

# அரச ஊழியரின் விடுமுறை இரத்து

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிலவி வரும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து மன்னாரிலிருந்து வெளிமாவட்டங்களுக்கான அனைத்து போக்குவரத்துக்களும் நேற்றுக்காலை 10 மணியுடன் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக அடை மழை பெய்துவருவதுடன், அங்கு வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ள நிலையில், அரசாங்க உத்தியோகத்தர்களின் விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் தொடர்பான அவசரக் கூட்டம் அம்மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தலைமையில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது. இதன்போதே மன்னார் மாவட்டத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை புத்தளத்திலிருந்து படகுகள் மூலம் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை, வெள்ளப் பாதிப்பிற்குள்ளான மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக 20 பஸ்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் வெள்ளப் பாதிப்பிற்குள்ளான மக்களின் அவசர தேவைக்காக கடற்படையினரின் உதவியும் கோரப்பட்டுள்ளதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய பிரதேச செயலாளர்களும் அரசாங்க அதிகாரிகளும் கிராம சேவை அலுவலகர்களும் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் டக்ளஸின் நிதியுதவியில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

(புதுக்குடியிருப்பு)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதிப்பங்களிப்பின் மூலம் முல்லை, புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தமது தொழிலை வளப்படுத்தும் வகையில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

குழந்தை இயேசு கோவில் வீதி மந்துவில் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சங்க தலைமைப்பணிமனையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் சங்கத்தலைவர் த.ஜெயதாஸ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில் கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சங்க அங்கத்துவர்கள் தமது தொழிலை மீளவும் மேற்கொள்ளும் வகையில் 67 பேருக்கு மேற்படி துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டதுடன் கிறிஸ்தவ அங்கத்தவர்களுக்கும் 50 பொருட்களுடன் கூடிய பொதிகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் முல்லை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.பத்மநாதன், ஈ.பி.டி.பி.யின் முல்லை மாவட்ட அமைப்பாளர் ஜெயராஜ், மந்துவில் கிராம அலுவலர் பாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். கடந்த யுத்த அனர்த்தம் காரணமாக மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட பின்னரும், சங்க தலைமையகம் முற்றாகச் சேதமடைந்த நிலையில் அண்மையில்தான் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. இதன்போது சங்க அங்கத்தவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டமையானது அவர்கள் தமது தொழிலை மேம்படுத்துவதற்கு உதவுமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. பொது முகாமையாளர் செபஸ்தியாம் பிள்ளையின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

# நாட்டின் கல்வித்துறையை வீழ்ச்சியடைய செய்யச்சதி

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் கல்வித்துறையை வீழ்ச்சியடைச் செய்ய சதித் திட்டம் தீட்டப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இலவச கல்வி மற்றும் அரச பரீட்சைகள் தொடர்பிலான நம்பிக்கையை சீர்குலைக்கும் சூழ்ச்சிகள் இடம்பெற்று வருவதாக, ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியானமை தொடர்பில் கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய பரீட்சை வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியாகின்றமை ஆரோக்கியமான நிலைமையல்ல என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றவாளிகளுக்கு உச்சபட்சமான தண்டனை விதிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 313 முன்னாள் போராளிகள் பொங்கலன்று விடுதலை

## சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா நகர மண்டபத்தில் ஜனவரி 13 ஆம் திகதி இடம்பெறவுள்ள தைப்பொங்கல் விழாவில் புனர்வாழ்வு பெற்ற 313 முன்னாள் போராளிகள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் ஆலோசகர் எஸ்.சதீஷ்குமார் தெரிவித்தார்.

இவ்விழாவின் பிரதம அதிதியாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கலந்து கொள்வார். இன உறவைப் பலப்படுத்தும் வகையில் மாத்தறை மாவட்ட பிரதேசபைகளின் உறுப்பினர்கள் உட்பட 100 பேர் இவ்விழாவில் பங்கேற்கவுள்ளனர். அன்றைய தினம் பொங்கல் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

# பிரதம நீதியரசரின் செயற்பாடு நீதித்துறை மீது நம்பிக்கை இழப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவின் செயற்பாடுகளால் நீதித்துறை குறித்து மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதாக தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணியின் செயலாளர் பெங்க்முவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

இது ஏதாவது ஒரு சூழ்ச்சியின் பிரதிபலன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சூழ்ச்சிக்குள் பிரதம நீதியரசரும் சிக்குண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பிரச்சினையை சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென சிலர் கூறுவதாகவும் அவ்வாறு செய்தால் அதனைச் செய்பவர்கள் தேசத் துரோகிகள் எனவும் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

கோல்டன் கீ வழக்கு விசாரணை நீதிபதிகள் குழாமில் பிரதம நீதியரசர் இருக்கின்றமை நியாயமானதல்ல என கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

கேணல்.ஆர்.ஹரிஹரன் கட்டுரையிலிருந்து

# இலங்கையில் இந்தியாவின் நலன்கள் பிரதானமாக வர்த்தகம் தொடர்பானதே!

**இந்திய அரசாங்கம் இலங்கை தொடர்பான அதன் கொள்கைத் தெரிவுகளை தீவிரமாக மறு ஆய்வு செய்வதற்கும் மற்றும் மறுமதிப்பீடு செய்வதற்குமான நேரம் வந்துவிட்டது... இந்தியாவின் வர்த்தக நலன்களை பாதிக்கும் வகையில் சமீபத்தில் இலங்கை சில முடிவுகளை எடுத்திருப்பது, இந்திய - இலங்கை உறவுகளில் முக்கிய பாதிப்பினை ஏற்படுத்துவதற்கான சில சமிக்ஞைகளை வெளியிட்டிருக்கிறது.**



**இந்தியாவின்** வர்த்தக நலன்களை பாதிக்கும் வகையில் சமீபத்தில் இலங்கை சில முடிவுகளை எடுத்திருப்பது, இந்திய - இலங்கை உறவுகளில் முக்கிய பாதிப்பினை ஏற்படுத்துவதற்கான சில சமிக்ஞைகளை வெளியிட்டிருக்கிறது. இந்த புயல் எச்சரிக்கைகள், மிகவும் தீங்கு பயக்கக்கூடியது என்று கருதப்படும் அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் தடுக்கும்படி உருவாக்கப்பட்ட அரசியல் அழுத்தங்களுடன் ஒன்று சேர்ந்துள்ளனவா? இலங்கையை கண்காணித்து வரும் பார்வையாளர்கள் அநேகமாக இந்தக் கேள்வியைப் பற்றி ஏற்கனவே விவாதித்து வருகிறார்கள்.

அவ்வப்போது பிக்கல் பிடுங்கல்கள் இடம்பெற்று வந்திருந்த போதிலும், இந்திய - இலங்கை உறவுகள் இதுவரை காலமும் சுமுகமாகவே இருந்து வந்துள்ளன, ஏனெனில் இருநாடுகளின் தலை வர்களுக்கும் இடையில் பிரதிபலிக்கும் ஒரு காரியவாத உணர்வு, சிறு சிறு நிகழ்ச்சி நிரல்கள், மற்றும் உணர்ச்சிகரமான மோதல்கள் என்பன இடம்பெறாமல் தடுத்து வந்துள்ளது. இது தெற்காசியாவில் இந்த உறவுக்கு ஒரு தனித்தன்மையை வழங்கியிருந்தது.

தற்போதைய இலங்கையின் கொள்கைப் போக்கு கவனிக்கப்படாமல் போனால், இந்தியாவிலுள்ள அரசியல்சாரா பிரிவினர் இடையே குறிப்பாக வர்த்தக சமூகத்தவர்கள் மத்தியில் இலங்கையின் நல்லெண்ணத்துக்கு பாதிப்பு ஏற்படலாம்.

முதலாவதாக சம்பூர் அனல் மின்சாரத் திட்டம் தொடர்பான பிரச்சினை, இது சம்பந்தமாக இந்தியா சார்பாக இந்திய தேசிய அனல் சக்தி கூட்டுத்தாபனமும் (என்.ரி.பி.சி) இலங்கை சார்பாக, இலங்கை மின்சார சபையும்(சி.ஈ.பி) கிழக்கு மாகாணத்தில் நிலக்கரி வெப்பத்தை பயன்படுத்தி 500 மெகா வாட், அனல் மின்சார நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கான ஒரு புரிந்துணர்வு குறிப்பாணையை கையெழுத்திட்டிருந்த போதிலும், 2006 டிசம்பரிலிருந்து இத்திட்டம் தாமதமாகிக் கொண்டே போகிறது.

இந்த தாமதத்துக்கு காரணமான உண்மையான காரணம் என்ன? கல்வித் தகைமைகளால் மின்சார மற்றும் எரிசக்தி பொறியியலாளராக தகைமை பெற்றுள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க தனது நேர்காணல் ஒன்றில் அதற்கான பதிலை தெரிவித்துள்ளார். "எனது அறிவிக்கு எட்டியபடி பல்வேறு வகையான காரணிகள் இந்த நிலைக்கு தமது பங்கினை வழங்கியுள்ளன. இலங்கையின் தேசியவாத இயக்கங்கள் மீதான பெருவீச்சிலான இந்தியாவின் விரோத மனப்பாங்கின் காரணமாக ஏற்படும் மனப்பயம் காரணமாகவே நான் இந்தியர்களுக்கு எதிராக சீனாவுக்கு பின்துணை வழங்குகிறேன், பின்னவர்களின் விடயத்தில் பிரதானமாக நுரைச்சோலை மின் நிலையம் முக்கிய இடத்தைப் பெறுகிறது".

இந்த திட்டத்தின் முக்கிய அமைச்சரின் பதிலில், இந்தியாவை பற்றி இந்த அடிப்படையிலான ஒரு மனப்போக்கு இருக்குமானால், இந்தியாவின் உதவியுடனான இந்த திட்டம் எப்படி முன்னேற்றம் அடையும்? இந்த தாமதம் காரணமாக இந்தியாவின் கவலை மிக உயர்ந்த அளவிற்கு சென்றுள்ளது என்பதை ஜனாதிபதி ராஜபக்ஷ மிக நன்றாகவே அறிவார். அவருடைய நடவடிக்கைகள் சம்பந்தமாக இந்தியா அவருக்கு ஆலோசனைகள் வழங்க முடியாது.ஏனெனில் அது ஒரு உள்நாட்டு விவகாரமாக மாற்றப்பட்டுவிடும். எனவே சிலர் விரும்புவதைப்போல இந்த விடயத்தை அரசியல் மயமாக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு இல்லை, ஆனால் முதலீடுகளின் வர்த்தகத் தகுதிக்கான ஒரு அறைகூவலாகவே இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது எரிச்சலூட்டும் நிகழ்வு இந்தியாவின் மோட்டார் வண்டி ஏற்றுமதி தொடர்பானது. இப்போது சில காலமாக இலங்கையின் மோட்டார் வண்டி தொழிலில் இந்தியா ஒரு சக்தியான பாத்திரத்தை வகித்து வருகிறது. குறிப்பாக இந்தியாவின் கையடக்க வகை சீருந்துகளுக்கு அங்கு 80 விகிதம் வரையான சந்தை வாய்ப்பு உள்ளது. போட்டியான விலை மற்றும் தரம் ஆகிய இரண்டிலும் அவர்கள் தங்களை நன்கு நிலை நிறுத்தியுள்ளார்கள். அதேபோலஇந்தியன் உந்து வண்டிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் என்பன சமமான பிரசித்தியை பெற்றுள்ளன.

புதுடில்லியின் திகதிக்கோட்டு லைவ் மின்ட் அறிக்கை வெளிப்படுத்துவதன்படி, 2012 ஆம் ஆண்டு முழுவதும் இந்திய மோட்டார் தொழிலின் ஏற்றுமதிக்கு இலங்கை இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தது, முதலில் ஏப்ரல் மாதத்தில் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டிருந்த கலால் வரியினைத் தொடர்ந்து, இறக்குமதி வரியிலும் குறிப்பிடத்தக்களவு வரி அதிகரிப்பை மேற்கொண்டிருந்தது. இலங்கை முதலில்100 விகிதமாக இருந்த பயன்பாட்டு வாகனங்களுக்கான காலால் வரியினை 173 விகிதமாக அதிகரித்திருந்தது. 1000 கன சென்ரி மீற்றர் (சீ.சீ) கனவளவுள்ள சீருந்துகளுக்கான மொத்த வரியினை 47 விகித கலால் வரி உட்பட மொத்தமாக 120 விகிதத்தில் இருந்து 200 விகிதமாக அதிகரிக்கப்பட்டது.

1.25 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான 800 சீ.சீ மாருதி வண்டியின் விலை, ஏப்ரல் 2012இன் பின்னர் 1.6 மில்லியன் இலங்கை ரூபாவாக உயர்த்தப்பட்டது. ஆனால் கலால் வரிஅதிகரிப்பு 2012 நவம்பரில் திணிக்கப்பட்ட பின்னர், அதே வாகனத்தின் விலை 1.75 மில்லியன் ரூபாவாக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்து வண்டிகளுக்கும் இதே நிலை தான். ஏப்ரல் 2012இல் ஜப்பானிலிருந்து இறக்குமதி யாகும் இரண்டாம் தர மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதி தீர்வை அதிகரிப்பு காரணமாக அந்த தொழிலை நசித்ததுடன் அதனை நடத்தியவர்களுக்கு பாரிய நட்டத்தையும் ஏற்படுத்தியது.

நவம்பர் மாதத்தில் உயர்த்தப்பட்டிருக்கும் கலால் தீர்வை கூட இந்திய மோட்டார் வியாபாரத்தை நசிப்பிப்பதாகவே உள்ளது. இலங்கையை ஒரு வியாபார ஸ்தலமாக முன்னேற்றும் எண்ணம் கொண்டுள்ள இலங்கை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள், 13 அங்கத்தவர்களைக் கொண்ட சக்தி வாய்ந்த இந்திய வணிக தூதுவர்களை (இந்த வருடத்தில் நான்காவது தடவையாக) கொழும்பில் சந்தித்த பின்னரும் இப்படிச் செய்வது, மிகவும் ஆச்சரியம் தருவதாகவே உள்ளது. ஆதி கோத்ரெஜ் தலைமையிலான இந்திய தூதுக்குழுவில் இந்திய மோட்டார் தொழில் துறையில் அனுபவமுள்ள முதிர்ந்த அங்கத்தவரான ராகுல் பஜாஜ் அவர்களும் இடம்பெற்றிருந்தார். இலங்கையின் பேச்சுக்கும் மற்றும் செயற்பாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் தெளிவற்ற தொடர்பின்மையை அவர்கள் நிச்சயம் கவனிக்கத் தவறியிருக்க மாட்டார்கள்.

இந்தியன் சீருந்துகளை தீர்வை முறைகளைப் பயன்படுத்தி சந்தையில் இருந்து ஓரங்கட்டும் காலத்திற்கு பொருத்தமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அதேவேளையில்கூட அம்பாந்தோட்டை, கம்பகா போன்ற இடங்களில் மோட்டார் வாகன பொருத்தல் தொழிற்சாலைகளை 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் நிறுவுவதற்கான சீனாவின் திட்ட யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

2009இல்இலங்கையில் 78மில்லியன்களாக இருந்த இந்தியாவின் முதலீடு இப்போது 147 மில்லியன்களாக இரட்டித்துள்ளது. டாட்டா, பஜாஜ், கோத்ரெஜ், பாரதி மற்றும் ஆர்.பி.ஜி என்பன ஏற்கனவே இலங்கையில் நன்கு இடம் பிடித்துள்ளன. இந்தியா மற்றும் இலங்கை என்பன தங்கள் வியாபார மற்றும் வர்த்தக தொடர்புகளை அதிகரித்துக் கொள்வது நல்ல ஒரு கருத்துள்ள உணர்வாக அமையும் ஏனெனில் இந்தியாவிலிருந்து பாயும் முதலீடுகள், மூலமாக இலங்கை மக்களின் பொருளாதார வாய்ப்புகளை இந்தியா உயர்த்துவது போலவே, இலங்கையின் பலத்தினால் இந்தியாவும் நன்மை அடையும்.

இந்த நிலை ஏற்பட்டதற்கு சீனாவையோ அல்லது இந்தியாவுடன் ஒப்பீடு செய்து அதை வீழ்த்த சீனாவை தந்திரமான முறையில் பயன்படுத்தும் இலங்கையின் சிறுபிள்ளை விளையாட்டையோ பழி சொல்ல முடியாது. சீனாவின் செயற்பாட்டுப் பாணியில், இந்தியா மற்றும் இலங்கை இடையே வழக்கமாக எந்த விடயத்திலும் இட்டு நிரப்ப முயற்சிக்கும் அரசியல் பிரச்சினைகள் இல்லாமல் சுதந்திரமான செயற்பாடுகள் உள்ளன. அதற்கும் மேலாக சீனா இலங்கைக்கு மிகப் பெரியளவு கடன் வழங்குபவராக உள்ள அதேவேளை இந்தியா இலங்கையின் பல்வேறு வெகுமதிகள் வாயிலாக பயன்பெறும் ஒரு உபகாரியாகவே உள்ளது. திட்டங்களை கையாளும்போது உபகாரம் பெறுபவர்களைக் காட்டிலும் கடன் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது இயல்பான ஒன்றே. இல்லாவிட்டால் கடன் கொடுத்தவர் தனது பங்குத் தசையை தரும்படி கோர முடியும், மற்றும் சீனா அநேகமாக இதைத் தான் இப்போது செய்து வருகிறது.

எவ்வாவற்றையும் வெகு சுருக்கமாகச் சொல்வதானால், அநேகமாக இந்திய அரசாங்கம் இலங்கை தொடர்பான அதன் கொள்கைத் தெரிவுகளை தீவிரமாக மறு ஆய்வு செய்வதற்கும் மற்றும் மறு மதிப்பீடு செய்வதற்குமான நேரம் வந்து விட்டது.

# பொய்சொல்கிறார் யாப்பா

# எதிரணிகள் குற்றச்சாட்டு

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மக்களை தவறாக வழிநடத்தும் வகையில் பொய் சொல்வதாக தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த எதிரணி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தெரிவுக்குழுவின் தலைவர் வேண்டுமென்றே முற்றிலும் தவறான அறிக்கைகளை முன்வைத்துள்ளார். இது நகைப்பூட்டுவதாக அமைந்துள்ளது. என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தெரிவுக்குழுவின் செயற்பாடானது ஆரம்பத்தில் இருந்தே பக்கச்சார்பானதாக இருந்தமையினால் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அக்குழுவிலிருந்து வெளியேறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனினும் தெரிவுக்குழுவின் செயல்முறை பாரபட்சமற்றது வெளிப்படையானது என்று அக்குழுவின் தலைவர் அமைச்சர் யாப்பா. வலியுறுத்தி கூறுவது நகைப்பூட்டுவதாக அமைந்துள்ளது.

பிரதம நீதியரசரை சித்திரவதை செய்யவேண்டும் என்பதில் அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே தெளிவாக இருந்தது. தமது பெரும்பான்மை அதிகாரத்தைப் பயன்படுத்தி குழுவிற்கு எழுத்துமூலமான மற்றும் வாய்மூல சாட்சிகளை முன்கூட்டியே தயாரித்துக்கொண்டது என்றார்.

எதிர்க்கட்சியின் மற்றொரு உறுப்பினரான விஜித்த ஹேரத் தெரிவிக்கையில், இந்ததெரிவுக் குழுவானது பாரபட்சமானது அதன மீது நம்பகத்தன்மை இல்லை. இந்த குழுவின் செயற்பாடானது முற்றிலும் ஒரு பக்கச்சார்பான செயலாகும். அதனால் தான் அக்குழுவில் இருந்து எதிரணியினர் வெளியேறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அரசாங்க தரப்பினரோ பிரதம நீதியரசரை நீக்கிவிடவேண்டும் என்று ஆரம்பத்தில் இருந்தே நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

பிரதம நீதியரசரிடம் 1000 இற்கும் மேற்பட்ட பக்கங்களை



கொண்ட ஆவணங்களை கையளிக்கப்பட்டன. என்பதுடன் தெரிவுக்குழுவினால் கையளிக்கப் பட்ட அறிக்கையானது முற்றிலும் தவறானதாகும் என்றார்

# அடுத்த கட்ட நடவடிக்கை விலகமாட்டார் ஜனாதிபதி

(கொழும்பு)



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணை விசாரணை நடவடிக்கைகள் குறித்தும் அடுத்தக் கட்ட நடவடிக்கை தொடர்பில் ஜனாதிபதி விலகிச்செல்வதற்கு தயாரில்லை. என்று சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இது தொடர்பில் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகள் நாடாளுமன்றத்தை ஒத்திவைக்குமாறும் இன்றேல் உள்ளக குழுவை நியமிக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தன.

எனினும் தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி இதில் எதனையும் செய்யமாட்டேன் என்றும் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற செயல்முறை தொடரும் என்றும் எதிர்காலத்தில் புதிய சட்டங்களை தயாரிப்பது தொடர்பில் அடுத்தவருடத்தில் கவனம் செலுத்தப்படும் எனவும் குற்றப்பிரேரணை தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற செயன்முறை அரசியலமைப்பின் பிரகாரம் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார் என்றார்.

# புலிகளுக்கு ஆயுதம் வாங்க முயன்ற கனேடியத்தமிழர்கள் மீது விசாரணை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வாங்க முயன்றதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள இரு கனேடியத் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான நீதிமன்ற விசாரணைகள் நேற்றுமுன்தினம் அமெரிக்காவில் ஆரம்பமாகியுள்ளன.

பிரதீபன் நடராஜா (36), சுரேஸ சிறீஸ்கந்தராஜா (32) ஆகிய இருவரும் தம்மை அமெரிக்காவுக்கு நாடு கடத்தக் கூடாது என்று கோரி கனேடிய உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், இருவரும் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக 2004ஆம் ஆண்டுக்கும் 2006ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்களை வாங்க முயன்றதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்காக நிதி திரட்டியது, 1 மில்லியன் டொலர் பெறுமதியான, 20 எஸ். ஏ-18 விமான எதிர்ப்பு ஏவுகணைகள், 10 ஏவுகணை செலுத்திகள், 500 ஏகே-47 துப்பாக்



கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை வாங்கி அனுப்ப முயன்றதாக இவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இவர்கள் மீதான வழக்கு அமெரிக்காவின் புரூக்லின் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்டால், பிரதீபன் நடராஜாவுக்கு குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது ஆகக் கூடியது ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.

சுரேஸ் சிறிஸ்கந்தராஜாவுக்கு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடும்.

# தூதரக சேவைகளை வழங்கிவரும் வெளிநாட்டு இலங்கையர்கள்

## – அமைச்சர் வீரவன்ச பெருமிதம்



(கொழும்பு)

தூதரக அதிகாரிகளின் சேவைகளை வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் இலங்கையர்கள் வழங்கிவருவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது

தீர்மானமிக்க தருணங்களில் சவால்களை வெற்றிகொள்ள சில வெளிநாட்டு தூதரகங்களினால் ஆற்றப்பட வேண்டிய சேவைகள், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் வழங்கினர்.

எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது இவ்வாறு வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் சேவையாற்றியுள்ளனர். தங்களது சொந்தச் செலவில் வெளிநாடுகளில் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் இலங்கையர்கள் ஒழுங்கு செய்திருந்தனர். நாட்டின் வறிய மக்களுக்கு சேவைகளை ஆற்றவும் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் மறந்துவிடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடவுளின் பெயரில் நிதி 12பேர் விளக்கமறியலில்

சிவனொளிபாதமலைக்கு தெய்வத்தை கொண்டு சென்று கொண்டிருந்த வேளையில் அந்த பெரஹராவிற்கு முன்பாக சென்று சட்டவிரோதமான முறையில் நிதி சேகரித்த 12 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட் 12 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களில் 09 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம் மூன்று சிறுவர்களையும் பிணையில் விடுதலை செய்துள்ளது.

எட்டியாந்தோட்ட பகுதியில் வைத்தே இவர்கள் சட்டவிரோதமான முறையில் நிதி சேகரித்துள்ளனர்.

பொதுமக்களிடமிருந்து குறைந்தது 100,000 ரூபாவை அவர்கள் சேகரித்திருந்ததாகவும் எட்டியாந்தோட்டையில் சுமார் 4 கிலோமீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் மட்டுமே 22 ஆயிரம் ரூபாவை அவர்கள் சேகரித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிவனொளிபாதமலையின் விகாராதிபதி அல்லது நிர்வாகத்தின் அனுமதி இன்றி குறித்த நபர்கள் பொது மக்களிடம் நிதியை சேகரித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 12 பேரில் 9 பேரும் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 20 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்றும் எட்டியாந்தோட்டை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்

# சமாதான செயலக வேண்டுகோளின்படி புலிகளுக்கு வானொலி உபகரணங்கள்

## என்கிறது விக்கிலீக்ஸ்




(கொழும்பு)

நோர்வே தூதரகத்தினால் விடுதலைப் புலிகளுக்கு வானொலி உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டமையை சிங்கள கடும்போக்காளர்களும் சமாதானத்துக்கு எதிரானவர்களும் எதிர்ப்பதாக அமெரிக்க தூதரகம் இராஜாங்கத் திணைக்களத்துக்கு அறிவித்திருந்தது என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த உபகரணங்கள் இலங்கையின் சமாதான செயலகத்தின் வேண்டுகோளின் பேரிலேயே இறக்குமதி செய்யப்பட்டதாக அமெரிக்க தூதரகம் கூறியிருந்தது.

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கத்துக்கும் சமாதான செயலகத்துக்கும் இடையில பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதத்தின் அடிப்படையில், இந்தக் கோரிக்கை சமாதான செயலத்தினால் நோர்வே தூதரகத்துக்கு விடுக்கப்பட்டமை தெரிய வந்தது.

எனினும் சிங்கள கடும்போக்காளர்களும் சமாதானத்துக்கு எதிரானவர்களும் இந்த உபகரணங்கள், நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் வெஸ்ட்பேக்கினால் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டதாக கூறுவதாக அமெரிக்க தூதரகம் அறிவித்திருந்தது

# நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும்

## கூறுகிறார் சுமந்திரன்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை கலைப்பதன் மூலம் தற்போது நாட்டில் எழுந்துள்ள நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையிலான முறுகலை தவிர்க்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நாடாளுமன்ற கலைப்பு யோசனையை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, மற்றும் டியூ குணசேகர ஆகியோர் ஜனாதிபதியிடம் விடுத்திருந்தனர்.

எனினும் அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை என்று ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க



தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்படுமானால், அது பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் விசாரணையை உரியமுறையில் மேற்கொள்ள வழிவகுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்த விசாரணைகளை மேற்கொண்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் மீது நம்பிக்கையில்லாமல் போயுள்ளமையையும் அவர்சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில் பிரதம நீதியரசர் தாக்கல் செய்துள்ள மனுவின் அடிப்படையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுத்துள்ள அழைப்பாணையை ஏற்று நாடாளுமன்ற சபாநாயகர், மற்றும் தெரிவுக்குழு உறுப்பினர்கள் நீதிமன்றத்தில் சமுகமளிக்க வேண்டும் என்றும் சுமந்திரன் கோரியுள்ளார்.

# அனுமதியற்ற விளம்பரப்பலகையை அகற்றுவதற்கு நகரசபை நடவடிக்கை

(சாவகச்சேரி)

அனுமதி பெறப்படாத அனுசரணையாளர் பெயர்ப் பலகைகள் சாவகச்சேரி நகர சபையினரால் அகற்றப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட கடைகளின் பெயர்ப் பலகைகள் அனுசரணையாளரால் பொருத்தப்படும் பட்சத்தில் அதற்கான அனுமதி பெறப்பட்டே பொருத்தப்படவேண்டும் என நகரசபையினர் தெரிவித்தனர்.

இதன்படி அனுமதி பெறப்படாத அனுசரணையாளர் பெயர்ப் பலகைகள் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன. விற்பனை முகவர்களோ, கம்பனிகளோ இதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அதற்கான கட்டணத்தை சதுர அடி என்ற அடிப்படையில் செலுத்தி அனுமதி பெறப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந் நடைமுறை பல காலங்களாக நடைமுறைக்கு கொண்டு வரப்படாமல் இருந்து வந்துள்ளது. தற்போது இதனை அதிகளவிலும் கண்டிப்பாகவும் நடைமுறைப்படுத்துவதாக நகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கமைய நேற்றுமுன்தினம் கல்வயல், மட்டுவில், நுணாவில் பகுதிகளில் உள்ள கடைகளில் பொருத்தப்பட்ட விளம்பரப் பெயர்ப் பலகைகள் அகற்றப்பட்டன. (இ)

# முதியோர் இல்லங்களுடன் தொடர்பாடல் விஸ்தரிப்பு

வடமாகாணத்தில் உள்ள 13 முதியோர் இல்லங்களுடனும் தொடர்பாடலை ஏற்படுத்தி வினைத்திறனுடைய முதியோர் சேவையையும், முதியோர் பராமரிப்பு சேவையையும் வழங்குவதற்கு கைதடி அரச முதியோர் இல்லம் முன்வந்துள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதிக்குப் பின்னர் நடைபெறவுள்ளது. இதற்கான திகதியும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

இது சம்பந்தமாக ஆர்வலர்கள் இவ் ஒன்றுகூடலில் கலந்து கொண்டு தமது அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும். கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரனுடன் தொடர்பு கொண்டு கலந்து கொள்ள விரும்புவோர் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# மரமுந்திரிகை கன்று விநியோகம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தினால் செயலக பிரிவுக்குட்பட்ட சகல கிராம மக்களுக்கும் மரமுந்திரிகைக் கன்று வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கிராம அலுவலர் பிரிவுகளூடாக ஒரு குடும்பத்துக்கு தலா ஒரு மரமுந்திரிகைக் கன்று வீதம் வழங்கப்பட்டுள்ளது. (38)

# தொடர் மழையினால் வயல் நிலங்களில் வெள்ளம்

(புதுக்குடியிருப்பு)

சீரற்ற காலநிலையின் நிமித்தம் தற்போது தொடர்ந்து பெய்து கொண்டிருக்கும் மழை காரணமாக உடையார்கட்டு மற்றும் முரசுமோட்டை, கண்டாவளைப் பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் வெள்ளத்தால் மூடியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

பரந்தன் - புதுக்குடியிருப்பு பிரதான சாலையை ஊடறுத்துச் செல்லும் சில ஆறுகளூடாக வெள்ளம் கரைபுரண்டு பாய்ந்து கொண்டிருப்பதனால், குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் நெற்பயிர்களை மூடிய நிலையில் வெள்ளம் நிற்பதோடு வீதிகளையும் மேவிப் பாய்ந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (138)

# அருணோதயக் கல்லூரியின் இன்னிசை மாலை நிகழ்வுகள்

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வளர்ச்சிக்காக வருடம் தோறும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களினால் நடத்தப்படும் அருணோதயம் இன்னிசை மாலை இசை நிகழ்வு இம்முறை யாழ்ப்பாணம், கொழும்பு, அவுஸ்ரேலியா ஆகிய இடங்களில் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

தென்னிந்திய திரைப்படப் பாடகர் மதுபாலகிருஸ்ணன் மற்றும் விஜய் ரீ.வி புகழ் சுப்பர் சிங்கர்ஸ் கலந்து சிறப்பிக்கவிருக்கும் இன்னிசை மாலை நிகழ்ச்சிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி கொழும்புக்திரேசன் மண்டபத்திலும் ஏப்ரல் 7 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்திலும் யூன் மாதம் முதலாம் திகதி அவுஸ்ரேலிய சிட்னி நகரிலும் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் இசை ஆர்வலர்கள் அனைவரும் கலந்து சிறப்பிப்பதுடன் கல்லூரியின் வளர்ச்சிக்கு கைகொடுக்குமாறும் பழைய மாணவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# யாழிலுள்ள வீடொன்றில் பணம், நகை கொள்ளை

யாழ்.வீதிப்பகுதி வீடொன்றில் பணமும் பெறுமதியான தங்க நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லோரன்ஸ் தெரிவித்தார்.

வீட்டு உரிமையாளர் வீட்டில் இல்லாத சமயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் 1 மணியளவில் வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகைகளை திருடிச் சென்றுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

திருட்டுச் சம்பவம் குறித்து யாழ். குற்றப்பிரிவு பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (25)

# முரசின் இன்றைய பலன்

(29.12.2012 - சனிக்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 14 ஆம் திகதி. நட்சத்திரம் புனர்பூசம் முழுவதும், சித்தம். திதி பிரதமை மாலை 5.53 வரை.

இராகுகாலம் 9.29 - 10.59 வரை. சுபநேரம் 3.29 - 4.59 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செயல்திறமை கண்டு பிறர் பொறாமை. உதவும் குணம். தொழில் இடையூறு இருக்கும். குறைந்த பணவரவு. பாதுகாப்பு கவனம். எதிர்பாராத செலவுகள். |
| ரிஷபம் | எதிரியால் இருந்த தொல்லை குறையும். வாழ்வு வளம்பெற புதியதிட்டம். தொழில், தொடர்பு பலம் பெறும். உபரி வருமானம். |
| மிதுனம் | அனுபவ அறிவு பரிமளிக்கும். புதிய சிந்தனைக்கு தகுந்த நன்மை. தொழில், வியத்தகு வளர்ச்சி நிலை. தாராள பணவரவு. |
| கடகம் | அலைச்சல் இருக்கும். ஆரவாரமின்றி இருப்பது நல்லது. தாமதமான செயல் நிறைவேற புதுவழி பிறக்கும். தொழில் சீர். அளவான வரவு. |
| சிம்மம் | செயல்களில் குளறுபடி. அறிமுகமற்றவர்களுடன் பேச்சை தவிர்க்கவும். வேலைப்பளு. வரவை விட செலவு கூடும். உடல்நலத்திற்கு உணவில் கவனம். |
| கன்னி | அடுத்தவரின் தவறுக்கு நீங்கள் பாதிக்கப்படுவீர்கள். சேர்க்கை சகவாச வகையில் சிளமுண்டாகலாம். தொழில் இலக்கு தாமதம். |
| துலாம் | பலரும் அன்பு பாராட்டுவர். ஆதாய பலன்கள் தாமாக தேடி வரும். தொழில், அபிவிருத்தி. எதிர்பார்த்த பணவரவு. விருந்து உபசரிப்பு. |
| விருச்சிகம் | நிதான செயல்பாட்டுக்குப் பலன். தொழிலில், புது மூலதனம். கூடுதல் நேரம் பணி. சீரான பணவரவு. பகட்டான பேச்சுகளில் மயங்க வேண்டாம். |
| தனுசு | அவசரப்பணி ஒன்று வரும். எவருடனும் சச்சரவு வேண்டாம். பணியிடத்தில் அவதானம். பணத்தேவை கூடும். சேமிப்பு பயன்படும். |
| மகரம் | நண்பருடன் மிகுந்த நேரம். எதிர்பார்த்தது நடப்பதில் தடங்கல். தொழில், தேக்க நிலை. பண நெருக்கடி இருக்கும். உடல் நலம் கவனம். |
| கும்பம் | செயல்களில் புதிய அணுகுமுறை. தொழிலில் மகிழத்தக்க சாதனை. செலவுகள் இருக்கும். புதியவர் அறிமுகம். கேட்டது கிடைக்கும் யோகம். |
| மீனம் | எளிமையான எண்ணங்களுடன் செயல்படுவீர்கள். நண்பர்கள் உதவுவர். தொழில் சிறப்படையும். தாராள பணவரவு. குடும்பத்தேவைகளை நிறைவேறும். |



காரைநகர் ஈழத்துச் சிதம்பர சிவன் ஆலய மார்கழி திருவெம்பாவை பஞ்சரத உற்சவத் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்ற போது நடராஜப் பெருமான் தேரேறுவதற்காக எழுந்தருளுவதையும், பஞ்சரதங்கள் ஆரோகணிப்பதையும் காணலாம். (50)

# மண்டைதீவு பிரதேசத்தில் சிறுமியைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் நான்கு வயதுச் சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகலில் இருந்து காணமல் போயுள்ளார்.

மண்டைதீவு இரண்டாம் வட்டாரத்தில் வசித்து வந்த குலசேகரன் சுடரினி (வயது - 4) என்ற சிறுமியே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் வீட்டில் குறித்த சிறுமி காணப்பட்டதாகவும், அதன் பின்னர் அவர் காணாமற்போயிருப்பதாகவும் தெரியவருகிறது.

இவர் காணாததை அடுத்து பெற்றோர் அயலவர்களது உதவியுடன் அருகில் உள்ள கிணறு மற்றும் பற்றை போன்ற பகுதிகளில் தேடியும் நேற்றுக் காலை வரை சிறுமி மீட்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து மண்டைதீவுப் பகுதியில் உள்ள பொலிஸாரிடமும், கடற்படையினரிடமும் முறையிடப்பட்டுள்ளது. குறித்த சிறுமி பாலர் வகுப்புக்கு செல்பவர் எனவும் தெரிய வருகிறது. (பா)

# ஒன்றுகூடல்

வடமராட்சி கல்வி அலுவலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் வடமராட்சி வலயத்திலிருந்து ஓய்வு பெற்ற ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரமூர்த்தி பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு நிலை) பா.ரகுநாதன், ஆசிரிய நிலைய பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற செல்வி இ.சுப்பிரமணியக் குருககள் முறைசாராப் பிரிவின் ஆசிரிய ஆலோசகராக இருந்து பதவியுயர்வு பெற்ற எஸ்.மரியநாயகம் ஆகியோர் சேவை நலன் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். (109)

# தொடர் அவுஸ்ரேலியா வசம்



(மெல்போர்ன்)

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி இனிங்ஸ் மற்றும் 201 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை ஒரு ஆட்டம் மீதமுள்ள நிலையில் கைப்பற்றிக் கொண்டது.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று மெல்போர்னில் நிறைவடைந்தது.

இதில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 440 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. சதம் அடிக்கும் முனைப்புடன் ஜோன்சன் ஆடியபோதிலும் மறு முனையில் விக்கெட்டுக்கள் தகர்க்கப்பட்டது. இதன் மூலம் அவரின் சதமடிக்கும் கனவு பலிக்காது போனது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி அதன் முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 460 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜோன்சன் 150 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 92 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். மற்றும் கிளார்க் 106, வட்சன் 83 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பந்துவீச்சில் எரங்க, பிரசாத் தலா மூன்று, மத்தியூஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஏற்கனவே, காயம் காரணமாக வெளியேறிய பிரசன்ன ஜெயவர்த்தன, வெலகெதர ஆகியோரின் இழப்பு இலங்கை அணிக்கு அதிக நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கும். இந்நிலையில் 310 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. ஒரு ஓட்டத்தை பெற்றவேளை கருணரட்ணவும், 2 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை டில்சானும் மூன்று ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை அணிக் கப்டன் மஹேலவும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். இது இலங்கை அணியின் ஏனைய துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிகமான மன அழுத்தத்தைக் கொடுத்திருக்கும் என்றே நம்பலாம். இந்நிலையில் இணைந்த சங்கக்கார பொறுப்பாக ஆடி அணியின் ஓட்ட வேகத்தை உயர்த்த முற்பட்டார். இருப்பினும் துரதிர்ஷ்ட வசமாக அவரும் 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை, காயம் காரணமாக களத்தை விட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது. தொடர்ந்து ஒரு முனையில் துணைத் தலைவர் மத்தியூஸ் ஆடிய போதும், மறுமுனையில் இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கியது. இறுதியில் இலங்கை அணி வெறும் 24.2 ஓவர்களை எதிர்கொண்டு ஏழு விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியைத் தழுவியது. இதில் சங்கக்கார 27, மத்தியூஸ் 35, பிரசாத் 17 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைவரும் ஒற்றை இலக்கத்துடன் வெளியேறி ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஜோன்சன், ப்ரட் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன் மூலம் அவுஸ்ரேலிய அணி இனிங்ஸ் மற்றும் 201 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. அத்துடன் மூன்று போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரை, ஒருபோட்டி மீதமுள்ள நிலையில் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டுள்ளது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சகலதுறையிலும் ஜொலித்தஜோன்சன் தெரிவானார். இலங்கை அணி முதல் இனிங்ஸ் 156. இரண்டரை நாள்களுக்குள் இப்போட்டி நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# சங்காவிற்கு சத்திர சிகிச்சை



(மெல்போர்ன்)

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவின் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ள நிலையில், அவருக்கு நேற்று மாலை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் குமார் சங்கக்கார விளையாடிக்கொண்டிருந்தபோது அவரது இடது கையில் எலும்புமுறிவு ஏற்பட்டது. நேற்றையதினம் காலை அவர் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது ஜோன்சன் வீசிய பந்து அவரது இடது கையைத் தாக்கியது. அவரது சுட்டு விரலில் அதிகளவிலான வீக்கம் காணப்பட்டதால் உடனடியாக மைதானத்தை விட்டு வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனைகளில் அவரது சுட்டு விரலில் முறிவு ஏற்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனால் அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

இச்சத்திரசிகிச்சையின் காரணமாக அவரால் 6 வாரங்கள் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியத் தொடர் முழுவதிலும் அவர் பங்குபெற மாட்டாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேகப்பந்து வீச்சாளர்களான நுவான் குலசேகர, சானக வெலகெதர, விக்கெட் காப்பாளரான பிரசன்ன ஜெயவர்தன வரிசையில் தற்போது சங்கக்காரரும் இணைந்திருப்பது இலங்கை அணிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்றே கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஹோலிக்கு தலைமைப் பதவி வலியுறுத்தும் கவாஸ்கர்

(புதுடில்லி)

கப்டனான டோனிக்கு ஓய்வு கொடுக்கலாம். இவருக்கு பதிலாக விராத் ஹோலியை புதிய கப்டனாக நியமிக்கலாம் என இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கவாஸ்கர் ஆலோசனை தெரிவித்தார்.

டெஸ்ட், ஒருநாள் போட்டி, ருவென்டி-20 என மூன்றுவிதமான கிரிக்கெட்டில் இருந்தும் கப்டனாக டோனிக்கு ஒரு சிறிய 'பிரேக்' அளிக்கலாம். தற்போது பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் நடக்கும் நிலையில், இதனை அமுல்படுத்த முடியாது. அடுத்து நடக்க உள்ள அவுஸ்ரேலிய தொடர் அல்லது 2013இன் பிற்பகுதியில் டோனிக்கு ஓய்வு தரலாம். இதன் மூலம் இவர், தனது செயற்பாடு குறித்து மதிப்பீடு செய்து, சிறப்பான முறையில் மீண்டு வரலாம். அவரின் துடுப்பாட்டத் திறனும் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. நெருக்கடியின்றி ஆடுகளத்தில் ஆடக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

டோனிக்கு பதிலாக நீண்ட கால அடிப்படையில் விராத் ஹோலியை புதிய கப்டனாக நியமிக்கலாம். இவர், 'டைகர்' பட்டோடியை போன்று மிகச் சிறப்பாக செயற்படுவார். கப்டன் பதவிக்கான ஆக்ரோஷம், ஆற்றல், கம்பீரம், உயர்ந்த தரம் ஆகிய அனைத்தும் இவரிடம் உள்ளது. டோனி 'மட்ச் வின்னர்' என்பதால், சாதாரண வீரராக குறைந்தது இரண்டு ஆண்டுகள் வரை அணியில் நீடிக்கலாம்.

அவுஸ்ரேலிய தொடருக்கு பின் பயிற்சியாளர் பிளட்சரின் ஒப்பந்தம் நீடிக்க வாய்ப்பு இல்லை என கூறப்படுகிறது. இந்நிலையில், புதிய பயிற்சியாளராக இந்தியர் ஒருவர் அல்லது கரி கிறிஸ்டன் போன்ற திறமையானவரை நியமிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கும் முகமாக நேற்று மும்பை சென்றார் பிரேசில் அணியின் முன்னாள் கால்பந்து வீரர் ரொனால்டினோ.

# விலகினார் ஷரபோவா



(பாரிஸ்)

சியோலில் நடக்கவிருந்த கண்காட்சி ரென்னிஸ் போட்டியில் இருந்து ஷரபோவா விலகினார்.

ரஷ்யாவின் ரென்னிஸ் வீராங்கனை ஷரபோவா (வயது-25). இவர், டென்மார்க்கின் வோஸ்னியாக்கியுடன், கண்காட்சி போட்டியில் மோத இருந்தார். ஆனால், கழுத்து வலிகாரணமாக விலகியுள்ளார். இது குறித்து இவர் சமூக வலைத்தளமான டுவிட்டரில் வெளியிட்ட செய்தியில், கழுத்தில் ஏற்பட்ட வலி காரணமாக, கண்காட்சி போட்டியில், இருந்து விலகுகிறேன். இதற்காக எடுத்த பரிசோதனை முடிவின்படி, மருத்துவர்கள் சில நாட்களுக்கு ஓய்வு எடுக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளனர். எனினும் அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னில் தொடரில் பங்கேற்க அதிக வாய்ப்பிருக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வட்சன் காயம்

(மேல்போர்ன்)

அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் ஷேன் வட்சன் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றும் போதே அவர் காயமடைந்துள்ளார். இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு பந்துவீசும் போது வட்சனின் கெண்டைக்கால் பின்தசையில் உபாதை ஏற்பட்டது. அதன்போது அவர் 3 ஓவர்களை மாத்திரம் வீசியிருந்தார். இப்போட்டியில் அவர் காயமடைந்துள்ளதையடுத்து ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள சிட்னி டெஸ்ட் போட்டியில் வட்சன் பங்குபற்றுவது சந்தேகத்திற்குரியது என அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக தொடர்ச்சியாகக் காயங்களால் அவதிப்பட்டுவரும் வட்சன் தென்னாபிரிக்காவிற்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியிருக்காததோடு, மூன்றாவது போட்டியிலேயே அணியில் சேர்க்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விதிகளை மீறிய லேமனுக்கு இரண்டு வருடத் தடை

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் (சி.ஏ.) விதிகளை கடுமையாக விமர்சித்த, முன்னாள் அவுஸ்ரேலிய வீரர் டரன் லேமனுக்கு, இரண்டு ஆண்டு தடை விதிக்கப்பட்டது.

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரர் டரன் லேமன். பிக்-போஸ் ருவென்டி-20 தொடரில், இவர், பிரிஸ்பேன் ஹீட் அணியின் தலைன்மப் பயிற்சியாளராக உள்ளார். இவரது அணி மெல்போர்ன் ரெனிகேட் அணியிடம் சமீபத்தில் தோற்றது. ரெனிகேட் அணியின் சாமுவேல்ஸ் (மேற்கிந்தியத்தீவு) இப்போட்டியில் 4 ஓவர்கள் பந்து வீசிய இவர் 18 ஓட்டங்களைக் கொடுத்தார்.

இதுகுறித்து டரன் லேமன் கூறுகையில், சாமுவேல்ஸ் பந்துவீச்சு சந்தேகத்திற்கு இடமாக இருப்பதால், ஐ.பி.எல். தொடரில் பந்துவீச அனுமதிக்கப்படவில்லை. இங்கு மட்டும் ஏன் அனுமதிக்க வேண்டும், என, கேள்வி எழுப்பினார்.

சம்பவம் குறித்து விசாரித்த சி.ஏ. வெளியிட்ட அறிக்கையில், விதிகளை மீறி பத்திரிகையாளர்களிடம் லேமன், பேசியது தவறு.

இவரது செயல் கண்டனத்துக்கு உரியது. இவருக்கு ரூ. 1.70இலட்சம் அபராதம், இரண்டு ஆண்டுகள் தடையும் விதிக்கப்படுகிறது எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, லேமனுக்கு விதிக்கப்பட்ட தண்டனை குறித்து கிரிக்கெட் ஆய்வாளர்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச அளவில் புகழ்பெற்ற பல்கலை கிரிக்கெட் ஆரம்பம்

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டிகள் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பித்து இடம்பெற்று வருகின்றன.

இந்தப் போட்டிகள் தனியே இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குள் மட்டும் இடம்பெறாமல் இலங்கையில் வெற்றிபெறும் பல்கலைக்கழகங்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இடம்பெறும் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டியில் வெற்றி பெறும் அணிகளுடன் மோத வுள்ளன. எனவே இப்போட்டிகள் உள்ளூர் நிலையைத் தாண்டி சர்வதேச அளவில் புகழ்பெற்று இருப்பதன் காரணமாக பலராலும் கவனமீர்க்கப்பட்ட போட்டிகளாகக் காணப்படுகின்றன.

கடந்தாண்டு இந்த மூன்று நாடுகளினதும் பல்கலைக் கழகங்கள் பங்குபற்றிய போட்டிகள் இலங்கையிலேயே இடம்பெற்றிருந்தன.

அப்போட்டிகளில் இலங்கைப் பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்துவம் செய்து அம்முறை சம்பியனான கொழும்பு பல்கலைக்கழக அணி பங்குபற்றி இருந்தது என்பது குறிப் பிடத்தக்கது.

இம்முறை 2013 ஆம் ஆண்டின் கிரிக்கெட் போட்டிகளிலான ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகத்தை கண்டறிவதற்கான போட்டிகளுக்கு முன்னதாக இலங்கையில் சிறந்த பல்கலைக்கழக அணியை தெரிவு செய்வதற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் போட்டிகள் அனைத்தும் ருவென்ரி-20 போட்டிகளாகவே அமைந்திருப்பதுடன் அணிகள் அனைத்துக்கும் இந்தியன் பிறிமியர் லீக் போட்டிகளைப் போன்று பெயரிடப்பட்டு பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றன.

வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக அணிகளை உள்ளடக்கி மொத்தமாக 14 அணிகள் பங்குபற்றி வருகின்றன.

இம்முறை போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறும் அணிக்கு இந்தியாவில் இடம்பெறவிருக்கும் மாபெரும் இறுதித் தொடரில் பங்குபெற வாய்ப்புக்கள் இருப்பதுடன், போட்டிகளில் பங்குபற்றி சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும் வீரரொருவருக்கு கடந்த வருடம் போல் இந்த வருடமும் ஐ. பி. எல். அணி களில் ஒன்றான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் பங்குபற்றும் அரிய வாய்ப்பும் காத்திருக்கிறது.

2013 ஆம் ஆண்டுக்கான போட்டி களில் பங்குபற்றி ஐ. பி. எல். அணி யில் இடம்பெறுவதற்கு முதலில் தேசிய மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் தொடர் ஆட்ட நாயகன் விருதைப்பெறுவதுடன் அவரது அணி தேசிய மற்றும் நாடுகளுக்கிடையிலான இறுதிப் போட்டியிலும் வெற்றி பெறு வதுடன், நாடுகளுக்கான போட்டியில் சிறந்த திறமை வெளிப்பாடுகளை காட்டியவராக இனம் காணப்படுவதும் அவசியமாகிறது. இதேபோன்ற அரிய வாய்ப்பை கடந்த வருடம் இந்தியாவின் மும்பை பல்கலைக்கழக அணியான சால்வி அணி பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இம்முறை போட்டியில் பங்குகொள் ளும் 14 அணிகளும் விஜய், கமுனு, பரக்கும், காசியப்ப என்ற பழைய மன்னர்களின் பெயரில் உருவாக்கப்பட்ட குழுக்களில் வகைப்படுத்தப்பட்டு உள்ளது. முதலிரண்டு குழுக்களிலும் தலா மூன்று அணிகள் வீதம் ஆறு அணிகள் வகைப் படுத்தப்பட்டுள்ளன. ஏனைய இரண்டு குழுவிலும் தலாநான்கு அணிகள் வீதம் மொத்தமாக எட்டு அணி கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இவை தமக்குள் போட்டிகளில் பங்குபற்றி குழுக்களில் வெற்றிபெறும் முதலிரண்டு இடங்களைப் பெறும் அணி கள் காலிறுதிக்கு தகுதி பெற்றுக்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கை பிரதிநிதித்துவம் செய்து அணி ஒன்றும், வடக்கை பிரதிநிதித்துவம் செய்து அணி ஒன்றும் இதில் பங்குபற்றி வருகின்றன.

15 ஆம் திகதியுடன் முடிவடைந்த போட்டிகளில் இவ்விரு அணிகளும் இதுவரை தலா மூன்று போட்டிகளில் பங்கு பெற்றியிருக்கின்றன. இதில் கிழக்கு பல்கலைக்கழக அணியினர் மூன்று போட்டிகளிலும் தோல்வியை சந்தித்து இருப்பதுடன், வடக்கு பல்கலைக்கழக அணியினர் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றும், ஒரு போட்டியில் தோல்வியை சந்தித்தும் உள்ளனர்.

வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக அணி சார்பாக பல திறமையான வீரர்கள் தங்களது திறமைகளை வெளிகாட்டி வருவதுடன் அவர்களில் ஒருவர் திறமைகளை இலங்கை பல்கலைக்கழகங்களுக்குள் நடக்கும் கடினப் பந்து போட்டிகளில் காட்டும் பட்சத்தில் ஐ. பி. எல். அணிக்கு தெரிவாக கூடிய வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளக் கூடிய நிலை இருப்பதாக போட்டிகளை நடாத்தி வருகின்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வென்ற அணிகள்

இங்கிலாந்து பிறிமியர் லீக் தொடரின் போட்டிகளில் எவேர்ட்டன், மன்செஸ்டர் யுனைட் டட், செல்சீ, சன்டர்லான்ட், வெஸ்ட் ப்ரோம்விச், ரொட்டன்ஹம், ஸ்ரோக் அணிகள் வெற்றிபெற்றன.


எவேர்ட்டன், விகான் அத்லட்டிக் அணிகளுக் கிடையிலான போட்டியில் எவேர்ட்டன் அணி 2:1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது

எவேர்ட்டன் அணி சார்பாக 52ஆவது, 77ஆவது நிமிடங்களிலும், விகான் அத்லட்டிக் சார்பாக 82ஆவது நிமிடத்திலும் கோல்கள் பெறப்பட்டன.

மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்கும், நியூ காசில் யுனைட்டட் அணிக்குமிடையிலான போட்டி யில் மன்செஸ்டர் யுனைட்டட் அணி 4–3 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

செல்சீ அணிக்கும், நோர்விச் அணிக்குமிடை யிலான போட்டியில் செல்சீ அணி 38ஆவது நிமிடத் தில் பெறப்பட்ட கோலுடன் 1–0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. சன்டர்லான்ட் அணிக்கும், மன் செஸ்டர் சிட்டி அணிக்குமிடையிலான போட்டியில் சன்டர்லான்ட் அணி 53ஆவது நிமிடத்தில் பெற்றுக் கொண்ட கோலின் உதவியுடன் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. குயின்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணிக்கும், வெஸ்ட் ப்ரோம்விச் அணிக்குமிடையிலான போட்டி யில் வெஸ்ட் ப்ரோம்விச் அணி 2–1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

## சிறப்புற இடம்பெற்ற நாரந்தனை வி.க.வின் பரிசளிப்பு





(நாரந்தனை)

நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம், நாரந் தனைப் பிரதேச விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் மென் பந்து கிரிக்கெட் மற்றும் கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்தியது.

இதில் கால்பந்தாட்டப் போட்டிகளில் தம்பசிட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம் சம்பியனாகியதுடன், அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக்கழகம் 2ஆம் இடத்தைப் பெற்றது.

மென்பந்து கிரிக்கெட் போட்டியில் சம்பியனாக அல் லைப்பிட்டி பிலிப்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியும் இரண்டாமிடத்தினை அதே கழகத்தின் 'பி' அணியும் பெற்றுக் கொண்டன. இப்போட்டிகளில் வெற்றியீட்டி அணிகளுக்கான் பரிசளிப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஊர்காவற்துறை பிரதேசசபை தலைவரும், ஈ.பி.டி.பி ஊர்காவற்துறை பிரதேச இணைப்பாளருமான ம.ஜெயகாந்தன் மற்றும் பிரதேசசெயலக கிராம உத்தி யோகத்தர் சதீஸ்கண்ணா கிராம சேவகர்களான சகாதேவன், சிறிஸ் கந்தராஜா, கடற்படை கட்டளைத்தளபதி கப்டன் ஜெயதிலக ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



வடமாகாணத்திற்குட்பட்ட பொலிஸ் அணிகளுக்கிடையே கிளிநொச்சி யில் அண்மையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இதில் யாழ்ப்பாண பிரதேச பொலிஸ் அணி, கயிறு இழுத்தல் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இரண்டாமிடத்தைப் பிடித்த யாழ்ப்பாண பிரதேச பொலிஸ் அணியுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங் குளம் பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த, யாழ்ப்பாண பொலிஸ் தலைமைப் பரிசோதகர் சமன் சிகேரா, யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோத- கர் ராஜ குணசேகர ஆகியோரைக் காணலாம். (54)

## கிண்ணம் வென்றது செல்வபுரம் சந்திரன்

(அளம்பில்)

முல்லைத்தீவு இராணுவ படைப்பிரிவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில் செல்வபுரம் சந்திரன் அணி கிண்ணம் வென்றது.

முல்லைத்தீவு இராணுவ படைப்பிரிவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி அளம்பில் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி அளம்பில் விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் செல்வபுரம் சந்திரன் அணியும் சிலாவத்தை இளம் பறவையன் அணியும் மோதின.

போட்டியின் 5 ஆவது நிமிடத்தில் இளம்பறவையன் அணி முதல் கோலினைப் போட்டு முன்னிலை வகித்தது. முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, 1 : 0 என்ற கோல் கணக்கில் இளம்பறவையன் அணி முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சந்திரன் அணி பெனால்டி வாய்ப்பு ஒன்று கிடைக்க அதனை கோலாக்கியது. ஆட்டம் முடியும் வரையும் இரு அணிகளும் தலா ஒரு கோலினைப் பெற்றிருந்ததினால், ஆட்டம் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் செல்வபுரம் சந்திரன் 4 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது. சுற்றுப்போட்டியின் சிறந்த வீரராக சந்திரன் விளையாட்டுக்கழக அணியினைச் சேர்ந்த கே.நிசாந்தன் தெரி வானார்.வெற்றிபெற்ற அணிக்கும் வீரர்களுக்குமானபரிசில்களை பிரதம விருந்தினர் களாக கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி பிரிகேடியர் மார்க், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.



# ஊடகங்களைப் பயன்படுத்தும் அரசியல்

- எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.


கடந்த செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன -- ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை வெளியிட்டதை அடுத்து அதனோடு தொடர்புடைய சம்பவங்கள் தொடரொன்றே இடம்பெற்றது. இப்போது அச் சம்பவத் தொடர் அதன் உச்சக் கட்டமொன்றை அடைந்து இன்று பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க குற்றப் பிரேரணையொன்றின் மூலம் பதவி நீக்கம் செய்யப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளார்.

மஞ்சுள திலகரத்னவின் அந்த அறிக்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவே பல அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் நீதித்துறை அவ்வாறு அறிக்கை வெளியிடும் மரபோ வழக்கமோ எந்தவொரு நாட்டிலும் இல்லை.

அதன் பின்னரும் பிரதம நீதியரசரின் சார்பில் அவரது சட்டத்தரணிகளால் கடந்த டிசெம்பர் 7ஆம் திகதி ஓர் அறிக்கையும் அவருக்காக பொதுச் சட்டத்தரணிகள் குழுவொன்றினால் டிசெம்பர் 14ஆம் திகதி மற்றொரு அறிக்கையும் வெளியிடப்பட்டது.

அரசாங்கத்தின் பல அமைச்சர்கள் நீதித்துறையினர் இவ்வாறு அறிக்கை விடுவதை விமர்சித்தனர். புதுக்கடை இப்போது லிப்டன் சுற்றுவட்டமாக மாறியிருப்பதாக அவர்கள் கூறினர். நீதித்துறையினர் அரசியல்வாதிகளைப்போல் நடந்து கொள்கிறார்கள் என்பதே அதன் அர்த்தமாகும்.

நீதித்துறை வேறு வழியின்றி மக்களிடம் முறைப்பாடு செய்வதற்காக ஊடகங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும் நாட்டில் பல நீதிபதிகள் ஏனைய வழக்குகளின் போதும் நீதிமன்றங்கள் தொடர்பான ஏனைய விடயங்களின் போதும் ஊடகங்களுடன் ஒத்துழைத்து செயற்படுவதில்லை. சிலர் ஊடகங்களை நட்புக் கண்கொண்டு பார்ப்பதும் இல்லை.



இந்த நிலையை இந்நாட்டு ஊடகவியலாளர்கள் இதற்கு முன்னரும் பலமுறை கண்டுள்ளனர். அவற்றில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஊடகங்களுடன் நடந்து கொண்ட முறையும் இப்போது நடந்து கொள்ளும் முறையும் சிறந்த உதாரணமாகும். இராணுவத் தளபதியாக இருக்கும்போது பொன்சேகா - அரச ஊடகங்களை மட்டுமே மதித்தார். ஏனைய சில ஊடகவியலாளர்களை அவர் துரோகிகள் என்று வர்ணித்த சந்தர்ப்பங்களும் இருந்தன.

பல ஊடகவியலாளர்கள் அவர் தளபதியாக இருக்கும் காலத்தில் ஆயுததாரிகளால் தாக்கப்பட்டனர். அவ்வாறான சில சம்பவங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் அவரையே குற்றஞ்சாட்டினர். புலிகளுக்கு எதிராக கருத்து வெளியிட்ட சில ஊடகவியலாளர்களும் அவரது காலத்தில் இராணுவ முகாம்களுக்குள் அனுமதிக்கப்படவில்லை. சில ஊடகவியலாளர்கள் அக்காலத்தில் நாட்டை விட்டே தப்பி ஓடிவிட்டனர்.

பதவியில் இருந்து சரிந்த பின்னர் அவருக்கு ஊடகங்களே துணை என்ற நிலை உருவாகியது. குறிப்பாக சிறையிலடைக்கப்பட்ட பின்னர் ஊடகங்களே அவருக்காக நாட்டின் அரசியல் அரங்கில் இடமொன்றை அமைத்துக் கொடுத்தன.

அந்நாட்களில் அவர் அடிக்கடி மருத்துவமனைகளுக்கு அழைத்துவரப்பட்டார். அப்போதெல்லாம் ஊடகங்கள் அவரை சூழ்ந்து கொண்டன. ஓரிரு நிமிடங்களே அப்போது அவருக்கு தொலைக்காட்சி கமெராக்கள் முன் தோன்ற சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அவர் மிக சாதுரியமாக அந்த சில நிமிடங்களை தமது அரசியல் மற்றும் தனிப்பட்ட இருப்பை பாதுகாத்துக் கொள்ள பாவித்தார்.

போர் நடந்து கொண்டு இருந்த காலத்தில் ஊடக சுதந்திரத்தைப் பற்றிப் பேசியவர்கள் பலரை தேசத்துரோகி என்று கூறிய பொன்சேகாவின் இன்றைய அரசியுல் சுலோகங்களில் ஒன்றாக ஊடக சுதந்திரமும் இருப்பது விநோதமான விடயமாக இருப்பது போலவே மகிழ்ச்சிக்குரிய விடயமாகவும் இருக்கிறது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஐக்கிய தேசிய கட்சிக்குத் தாவிய மங்கள சமரவீரவும் ஒரு காலத்தில் அரசாங்க ஊடகங்களல்லாத ஏனைய ஊடகங்களை எதிரியைப் போல் கருதியவர். அவரே சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஊடகத்துறை அமைச்சராக இருந்தார். அவர் அப் பதவியில் இருந்த காலத்தில் இடம்பெற்ற ஊடகங்கள் விடயத்தில் முக்கியமான சம்பவமொன்று தான் 1997ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறையை ரத்துச் செய்யுமாறு கோரி ஐ.தே.க. கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் நடத்திய ஆர்ப்பாட்டம். அந்த ஆர்ப்பாட்டத்தை அரசாங்கம் பொலிஸாரையும் குண்டர்களையும் கொண்டு கலைத்தது. அப்போது பொலிஸாராலும் குண்டர்களாலும் இந்த நிகழ்வை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டனர். அவர்களது கமெராக்கள் அடித்து நொருக்கப்பட்டன. சில கமெராக்கள் குண்டர்களால் பறிக்கப்பட்டன.

பதவியில் இருக்கும் வரை சமரவீர இந்த அடாவடித்தனத்தை நியாயப்படுத்தினார். ஊடகவியலாளர்களும் ஐ.தே.கவினரும் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் புக முற்பட்டதால் அவர்கள் தாக்கப்பட்டனர் என்றே அவர் அப்போது வாதிட்டார்.

இப்போது அவருடைய அரசியலும் பெரும்பாலும் ஊடகங்கள் மீதே தங்கியிருக்கிறது. இன்று அவரே சில இணையத்தளங்களை நடத்த உதவி வருகிறார். ஊடக சுதந்திரத்தைப் பற்றி அக்கறையோடு பேசுகிறார்.

இவையெல்லாம் இப்போது ஊடக சுதந்திரத்தை மதியாது நடந்து கொள்ளும் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் புத்தியூட்டும் நிகழ்வாக இருக்கின்றன. ஆயினும் இப்போது ஊடகங்களை புறக்கணித்துவிட்டு தாமும் ஒருகாலத்தில் சரிந்தால் ஊடகங்களை பாவிக்கலாம் என அவர்கள் நினைக்கலாம். அது உண்மை தான். அவ்வாறானதோர் நிலைமை உருவானால் செய்தித் தாகத்தின் காரணமாக ஊடகங்கள் பழையனவற்றை மறந்து விடும் என்பதும் உண்மை தான். ஆனால் மனச்சாட்சி என்று ஒன்றும் இருக்கிறது அல்லவா?

# கிறிஸ்மஸ் வாழ்த்துகள்!

**கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் என்று நாம் தமிழில் கூறுவதைப் பிற மொழிகளில் எப்படிக் கூறுகிறார்கள் என்று கீழே பாருங்கள்...**

- ★ ரிஹாஸ்பேல் லெட்டீட்ஸ் (ஆபிரிக்கா)
- ★ காட் ஜீல் (நோர்வே)
- ★ ஷாவாடி பீ மாய் (தாய்லாந்து)
- ★ ஹைவா ஜோலுவா (பின்லாந்து)
- ★ பெலிஸ் நாவிடாட் (சிலி)
- ★ செலாமட் ஹரி நேடால் (மலேசியா)
- ★ செஸ் டிடாமொ போசிக் (யுகோஸ்லேவியா)
- ★ நயா சால் முபாரக் ஹோ (உருது)
- ★ இடா சைடான் வா சானாஹ் ஜடிடாஹ் (அரபிக்)
- ★ கன் டாசோ சன் டான் கங் ஹாவ் சன் (சீனம்)
- ★ ஷங் டான் சுக் ஹா (கொரியா)
- ★ பெலிஸ் நெவிடாட் (ஸ்பெயின்)
- ★ சங் மங் ஜியாங் சின்ஹ் (வியத்நாம்)
- ★ ஜோயெக்ஸ் நோயெல் (பிரான்ஸ்)
- ★ நடோலிக் லாவ்வென் (வேல்ஸ்)
- ★ ஷீவோ நாபா பார்ஷா (வங்காளம்)
- ★ ஷப் நயா வர்ஷ் (மராத்தி)
- ★ ஷப் நயா பராஸ் (ஹிந்தி)
- ★ மாலிகாயன் பாஸ்கோ (பிலிப்பைன்ஸ்)



# சுப்புடுவும் நாய்களும்!



பிரபல் சங்கீத விமர்சகர் சுப்புடுவின் எழுத்தில் தூக்கலான குணங்கள் இரண்டு. ஒன்று துணிச்சல். இன்னொன்று நகைச்சுவை. இப்படி அப்படி என்றில்லாமல் ஒட்டுமொத்தமாய்த் தாக்கித் தகர்ப்பது அல்லது ஐஸ் மழை பொழிந்து கலைஞர்களை ஏகத்துக்குக் குளிரச் செய்வது என இரண்டு அதிகபட்ச எல்லைகளிலும் அவர் பேனா இயங்குவதுண்டு.

அவரது கலை விமர்சனங்களால் என்னவெல்லாம் நடந்தேறியிருக்கின்றன! நடனமாடும் ஹேமமாலினியும், யாமினி கிருஷ்ணமூர்த்தியும் கோர்ட்டில் அவரை எதிர்த்து வழக்காடினார்கள்! ஒருமுறை அரசியல் தலைவர் அந்தஸ்தை அடைந்துவிட்டார் சுப்புடு! தஞ்சையில் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டினார்கள்! தம் நெஞ்சம் திறந்து அவர் எழுதிய விமர்சனங்களால் திருவையாறில் சட்டை கிழிக்கப்பட்டுத் தம் திறந்த நெஞ்சோடு வெளியேறினார்! ஏன்... ஒரு சங்கீதக் கச்சேரி நடைபெற்ற அரங்குக்கு வெளியே, “சுப்புடுவும் நாய்களும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்” என்று போர்டே எழுதித் தொங்கவிட்டுவிட்டார்களாம்! இந்த அறிவிப்பை அறிந்து சுப்புடுவுக்குப் பரம சந்தோஷம்!

சுப்புடுவுக்கும் செம்மங்குடிக்கும் இடையே பச்சைப் புல்லை தண்ணீர் தெளித்து போட்டால்கூடப் பற்றிக் கொள்ளும்! செம்மங்குடியைத் தொடர்ந்து தாக்குவதைக் கோட்பாடாகக் கொண்டவர் சுப்புடு. சுப்புடுவுக்கு ஒரு பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தார் எழுத்தாளர் சாவி. மயிலை ஆர்.ஆர்.சபாவில் நிகழ்ச்சி. பேச்சாளர்களில் செம்மங்குடியும் ஒருவர்! எக்கச்சக்க கூட்டம். சிலர் பேசிய பின் செம்மங்குடியின் முறை வந்தது. எழுந்தார். மைக்கைப் பிடித்தார்.

“சுப்புடு என்னைத் தொடர்ந்து கண்டனம் பண்ண வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அவர் கண்டனம் பண்ணினால்தான் எனக்கு நிறைய கச்சேரி “புக்” ஆகிறது. அப்படி ஒரு ராசி சுப்புடுவுக்கு!” என்று வெகு விஸ்தாரமாகப் பேசினார் செம்மங்குடி!

“அடடா! செம்மங்குடி என்ன அழகாக மேடையில் பேசுகிறார்! பேசாமல் அவர் கச்சேரி செய்வதை நிறுத்திவிட்டுச் பேச்சாளராக இயங்கலாமே!” என்று தனது ஏற்புரையில் சொன்னார் சுப்புடு!

**(‘சுவடுகள்’ என்ற புத்தகத்தில் திருப்பூர் கிருஷ்ணன்)**




# 200 கோடி சம்பளம்!

தமிழ்த் திரைப்பட நடிகைகளுக்கு பெரிய அளவில் சம்பளம் கொடுக்கப்படுவது இல்லை. அதிகபட்சமாக, இலட்சங்களில் தான், சம்பளம் கொடுக்கப்படுகிறது. பாலிவுட்டில் ஒரு சில நடிகைகள், ஒரு கோடி அல்லது இரண்டு கோடி ரூபா சம்பளம் பெறுகின்றனர்.

ஆனால், ஹொலிவுட்டில் நிலைமை வேறு. ஹொலிவுட் படங்களுக்கு, உலகம் முழுவதும் மார்க்கெட் இருப்பதால், அங்கு, நடிகைகளுக்கு சம்பளம் கொட்டிக் கொடுக்கப்படுகிறது. மிக பிரபலமான, போர்ப்ஸ் பத்திரிகை, ஹொலிவுட் நடிகைகளின் சம்பளப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில், ஹொலிவுட்டின் இளம் நடிகை, கிறிஸ்டின் ஸ்ருவேர்ட், ஒரு திரைப்படத்தில் நடித்ததற்காக, 200 கோடி ரூபா சம்பளம் வாங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. "டுவிலைட் சகா" என்ற படத்தின் அதிரடியான வெற்றிக்குப் பின் தான், கிறிஸ்ட் ஸ்ருவேர்ட்டின் சம்பளம், இந்த அளவுக்கு, எகிறியுள்ளதாகவும், அதில் கூறப்பட்டுள்ளது.

இவருக்கு அடுத்தபடியாக, கமரூன் டயஸ் என்ற நடிகை, 190 கோடி ரூபா சம்பளம் வாங்குகிறார். பிரபல நடிகை ஏஞ்சலினா ஜோலிக்கு இந்தப் பட்டியலில், நான்காவது இடம் தான் கிடைத்துள்ளது.

# விண்கல்லை நகர்த்த நாசா திட்டம்




விண்வெளியில் உள்ள 5 லட்சம் கிலோ எடையுள்ள விண்கல்லை சிறிது நகர்த்தி அமைக்க அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான "நாசா" திட்டமிட்டுள்ளது. இந்த முயற்சி வெற்றி பெற்றால், விண்வெளியில் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் முதல் மாற்றம் இதுவாகத்தான் இருக்கும். செவ்வாய் கிரகத்துக்கு பயணம் செல்லும் விண்வெளி வீரர்கள், தங்கள் ஓடத்தில் எரிபொருள்களை நிரப்புவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள விண்வெளி மையமாகவும் இதனைப் பயன்படுத்த முடியும். பூமிக்கும், நிலவுக்கும் நடுவே இந்த பிரமாண்டமான விண்கல் அமைந்துள்ளது. அட்லஸ் வி விண்கலம் மூலம் அந்த விண்கல்லைச் சுற்றி உறை அமைக்கப்பட்டு, அது இயல்பான இடத்தில் இருந்து சிறிது நகர்த்தப்படும். விண்வெளியில் உள்ள இதுபோன்ற பிரமாண்டமான விண்கற்கள், குறுங்கோள்களை நகர்த்தும் முயற்சி வெற்றியடைந்தால், அங்குள்ள உலோகங்கள், தாதுப் பொருள்கள் உள்ளிட்டவற்றை பூமிக்கு எடுத்து வரவும் வாய்ப்பு ஏற்படும். எனினும் இந்த தொழில்நுட்பம் முழுமையாக வெற்றியடைய 10 முதல் 12 ஆண்டுகள் வரை ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மடோனாவின் உடைக்கு 45 இலட்சம்!

பிரபல ஹொலிவுட் நடிகையும், பொப் இசைப் பாடகியுமான, மடோனாவுக்கு, 54 வயதாகி விட்டது. ஆனாலும், சர்வதேச இசை ரசிகர்களிடையே அவருக்குள்ள கிராக்கி, இன்னும் கடுகளவு கூட குறையவில்லை.

1990 ஆம் ஆண்டில், ஒரு இசை அல்பத்துக்காக, இவர் அணிந்திருந்த உடை, சமீபத்தில் லண்டனில் ஏலம் விடப்பட்டது. இந்த உடையை, மூன்று பாடல்களுக்கு, மடோனா அணிந்திருந்தார். பச்சை நிற பட்டுத் துணியால் தயாரிக்கப்பட்ட இந்த உடையை, பிரபல ஃபாஷன் டிசைனர், ஜீன் போல் கால்டியார், வடிவமைத்திருந்தார்.





"ஹங்கி பங்கி"என்ற இசை நிகழ்ச்சியின் போதும், இந்த உடையைத் தான், மடோனா அணிந்திருந்தார். இந்த உடை, அதிகபட்சமாக 15 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போகும் என, எதிபார்க்கப்பட்டது. ஆனால், அனைத்து எதிர்பார்ப்புகளையும் முறியடித்து, 45 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.


இந்த உடைக்கு, "புல்லட்ஷ என, பெயரிட்டு உள்ளனர். மடோனா அணிந்திருந்த உடை-யை, ஏலம் எடுத்தவரின் பெயர், பரம ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. ஏலம் எடுத்த உடையை, அவர் என்ன செய்யப் போகிறார் என்பதும் தெரியவில்லை.

# பிரிப்பது எது?

1. வட அமெரிக்கா - தென் அமெரிக்கா : பனாமா கால்வாய்
2. இந்தியா - இலங்கை : பாக்கு நீரிணை
3. இந்தியா - பாகிஸ்தான் : ராட்கிளிஃப் கோடு
4. இந்தியா - சீனா : மக்மோகன் கோடு
5. ஆசியா - ஐரோப்பா : யூரல் மலைத்தொடர்
6. இங்கிலாந்து - பிரான்ஸ் : ஆங்கிலக் கால்வாய்

# நம்மால் முடியும்!

- குமார் கணேசன். -



ஒன்றை இழந்துதான் மற்றொன்றை பெற வேண்டும். தன்னுடைய இளம்பருவத்தை வறுமையில் கழித்தவர்கள் வசதிக்காக ஏங்குகிறார்கள். எந்தப் பணம் அவர்களைத் துன்பத்திலும், சோதனையிலும் தவிக்கவிட்டு வேடிக்கை பார்த்ததோ, அந்தப் பணத்தை திகட்டுமளவு சம்பாதிக்கும் ஆசை அவர்களுக்கு வந்து விடுகிறது. தங்கள் தூக்கத்தை இழந்து, ஓய்வை இழந்து, பல இனிய அனுபவங்களை இழந்து பணத்தை குவிக்கிறார்கள்.

எண்ணம் சக்தி வாய்ந்தது. ஆயுதத்தை விட மதிப்பு மிக்கது. எண்ணத்தில் இருந்தே செயலுக்கான தூண்டுதலை நாம் பெறுகிறோம். நல்ல எண்ணங்கள், நல்ல விளைவு-களையும், தீய எண்ணங்கள் தீய விளைவுகளையும் தத்தம் செயலின் வழியே கொண்டிருக்கும். எண்ணமே வாழ்க்கையை வடிவமைக்கிறது. பணத்தின் மீது விருப்பம் இருக்கலாம், ஆசை இருக்கலாம். ஆனால் அதுவே வெறியாகி விடக் கூடாது.

நீங்கள் எதை வேண்டுமானாலும் அடுத்தவர் தலையில் கட்டிவிட முடியும். ஆனால் உங்கள் கவலையை அவர்கள் மீது சுமத்த முடியாது.

மனிதர்கள் இரண்டு வகை. எதற்குமே கவலைப் படாதவர்கள்; எடுத்ததற்கெல்லாம் கவலைப்படுகிறவர்கள் என இரண்டு வகை. நியாயமான கவலைகள் மனித இயல்பு. நேற்று வரை தொலைந்து போன பணத்துக்காகக் கவலைப்படுவதும்; அடுத்து தொலைத்ததை விட பணக்கார உறவினர் மூலமாக அதிகப்பணம் ஈட்டிவிட முடியுமா என்ற எதிர்பார்ப்பதும் எப்படி நியாயமான கவலையாகும்?

வாங்கிய கடனை எப்படிக் கொடுப்பது? கொடுத்த கடன் திரும்ப வருமா? பைக்கில் சென்ற கணவன் பத்திரமாக வீடு திரும்புவானா?

இப்படி கணக்கில்லாத கவலைகளும் சிலருக்கு எட்டிப்பார்க்கும். கவலைகள் காளான்களாய் முளைக்கும்., விட்டு வைத்தால் மலையாக மாறி நம்மை மலைக்கச் செய்யும்.

அனாவசியக் கவலைகளுக்கு இடமளிக்க வேண்டாம். அவை உங்கள் கனவுகளின் வண்ணங்களை இழக்கச் செய்யும். கவலை உங்களுடைய ஊக்கத்தை நலியச் செய்து விடும். ஊக்கத்தை இழந்தால் நீங்கள் வெற்றியில் இருந்து வெகுதூரம் விலகி நிற்கும்படியாகி விடும்.

இதைப் புரிந்து கொள்கிறவரை வாழ்க்கையில் உண்மையான எதிர்பார்ப்பு மற்றும் திருப்தி எது என்பதை நாம் உணர முடிவதில்லை.

நமக்கு மகிழ்ச்சி என்பது பொருட்களில் இல்லை. அவற்றை பெறுவதில் இருக்கிறது. அதனால் தான் நாம் கடைகடையாக ஏறி, நமக்குப் பிடித்தமானதை வாங்குகிறோம். மகிழ்ச்சி எங்கெல்லாம் இருக்கிறது? ஒலிக்கின்ற அருவியில், உலவுகின்ற காற்றில், அழகுப் பூக்களில், கவலை சிறிதுமில்லாத குழந்தையின் முகத்தில்... இப்படி எண்ணற்ற இடங்களில் மகிழ்ச்சி பரவிக் கிடக்கிறது.

சவால் என்பது சாதாரணமல்ல... ஒரு சவாலை நீங்கள் எதிர்கொள்கிற போது அது உள்ளடக்கிய அநேக பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. சவால்கள் வளர்ச்சிக்கு அவசியம். அவற்றை வெல்கிறபோது நீங்கள் வளர்ச்சி அடைகிறீர்கள் என்று அர்த்தம்...

நம்முடைய ஆற்றலை உறுதியான முறையில் பயன்படுத்துகிறபோது, நமது வாழ்விலும் அற்புதங்கள் நிகழும்.

நீங்கள் எப்படி சிந்திக்கிறீர்கள், எப்படி உணர்கிறீர்கள், நம்புகிறீர்கள் என்பதை பொறுத்தே உங்களுடைய வெற்றி நிர்ணயிக்கப்படுகிறது. உங்களுடைய வழக்கமான சிந்திக்கும் முறைதான் வெற்றி அல்லது தோல்விக்கான விதையை உங்கள் மனதில் ஊன்றுகிறது.

வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுவதற்கு, உங்களுக்குள் ஏராளமான திறன்கள் காத்திருக்கின்றன என்றாலும் அதை கண்டுகொள்ள வேண்டும், அதை கருத்தாய் வளர்க்க வேண்டும். நம்முடைய திறமையைக் கொண்டு பல உன்னதங்களை நாம் நிகழ்த்த முடியும் என்று நம்புங்கள்.

எதுவுமே இல்லாதிருப்பதை விட ஏதாவது ஒன்றைப் பெற்றிருப்பது மேலானது என்பார்கள். நம்பிக்கை என்பது விரும்பிய விதத்தில் எண்ணமிடுவது அல்ல, ஒன்றைத் திடமாக நம்புவது.

ஒரு எண்ணத்தை, ஒரு திட்டத்தை, ஒரு செயலால் உங்களால் உருவாக்க முடியும். பின்னணியில் வலுவான நம்பிக்கை இருந்தால் எதுவும் சாத்தியம்.

ஒரு விதையளவு நம்பிக்கை இருந்தால் போதும். சிறிய விதைதான்... ஆனால் அது விதைக்கப்பட்டு விடுகிறபோது... அது செல்வத்தையும், ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவந்து விடுகிறது.




**தினமுரசின் புதிர்ப்போட்டியில் நீங்களும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்**

## குழு விளையாட்டுக்கள்

| விளையாட்டு | ஆங்கிலப் பெயர் | ஒரு பக்கத்தில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. உதைபந்தாட்டம் | .................... | .................... |
| 2. கிரிக்கெட் | .................... | .................... |
| 3. கரப்பந்தாட்டம் | .................... | .................... |
| 4. வலைப்பந்தாட்டம் | .................... | .................... |
| 5. ஹொக்கி | .................... | .................... |

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

## சிந்தனைக்கு விருந்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A | C | T | O | R | S |
| A | T | T | E | S | T |
| S | E | A | S | O | N |
| C | E | N | T | E | R |
| R | O | S | T | E | R |
| S | A | L | O | O | N |
| 33 | 19 | 36 | 31 | 27 | 34 |

இங்கு E = 1, T = 6, S = 8

32 (1) L இன் பெறுமானம்? (..........)

31 (2) A இன் பெறுமானம்? (..........)

29 (3) C யின் பெறுமானம்? (..........)

20 (4) O வின் பெறுமானம்? (..........)

34

34

## புதிர்ப்போட்டி 23 இல் வெற்றியீட்டியோர் விபரம்



பெயர்: கி.கயறூபி
பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி



பெயர்: கி.டிசாயினி
பாடசாலை: யா /சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.



பெயர்: க.அபிராமி
பாடசாலை: யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



பெயர்: த.மதுஷா
பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.



பெயர்: இ.பிரியதர்சினி
பாடசாலை: யா/ உடுவில் மகளிர் கல்லூரி.

## புதிர்ப்போட்டி 23 இற்கான சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர்: க.அஜித்தா
பாடசாலை: மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

பெயர்: யோ.சிவரஜினி
பாடசாலை: யா/ மட்டுவில் கமலாசினி கனிஷ்ட மகா வித்தியாலயம்.

பெயர்: வி.யதுர்வினா
பாடசாலை: கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

பெயர்: எ.ஜோர்ஜ்டென்சி
பாடசாலை: கிளி/ கனகபுரம் மகாவித்தியாலம்.

பெயர்: ர.மேருஜா
பாடசாலை: யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

பெயர்: இ.தமிழினி
பாடசாலை: யா/ மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்.

பெயர்: இ.சாளினி
பாடசாலை: யா / கொக்குவில் இந்துக் கல்லூரி.

பெயர்: ர.அபிதா
பாடசாலை: யா / இராமநாதன் கல்லூரி.

பெயர்: அ.ஒனால்ட்குருஸ்
பாடசாலை: மன் / புனித வளனார் றோ.க.த. வித்தியாலயம்.

பெயர்: மெ.இங்கிதை
பாடசாலை: யா/ மெதழ்ஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

## புதிர்ப்போட்டி 23 இற்கான விடைகள்

1

| நாடுகள் | தலைநகர் | நாணயம் | தேசியப்பறவை |
|---|---|---|---|
| 1. இந்தியா | புதுடில்லி | ரூபா | மயில் |
| 2. கனடா | ஒட்டாவா | டொலர் | வாத்து |
| 3. ஐக்கிய அமெரிக்கா | வாஷிங்டன் | டொலர் | கழுகு |
| 4. அவுஸ்ரேலியா | கன்பெரா | டொலர் | சவாலோ பறவை |
| 5. தென் ஆபிரிக்கா | பிரிட்டோரியா | ரான்ட் | நீலக்கொக்கு |

2

1) P
2) I
3) N - K
4) IBCR
5) K/M

3

1) 8
2) 2
3) 4
4) 5
5) 1

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ..............................

பாடசாலையின் பெயர் ..............................

தரம் :- :-..............................

தொலைபேசி இல.:-..............................

முகவரி :-..............................

..............................

### முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ் பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

புதிர்ப்போட்டி 25 இற்கான விடைகளை எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

### அனுப்பவேண்டிய முகவரி

போட்டி இல....
தினமுரசு
73 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# மன்னாருக்கான போக்குவரத்து அனைத்து வழிகளும் துண்டிப்பு

(கிளிநொச்சி)

சங்குப்பிட்டி - பூநகரி வழியாக யாழ்ப்பாணத்திற்கான மன்னார் வீதியின் போக்குவரத்து துண்டிக்கப்பட்ட நிலையில் வன்னேரிக்குளம் ஊடாக மக்களின் பாவனைக்கு இருந்த வீதிப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் வன்னேரி, ஜெயபுரம் ஊடாக மக்கள் போக்குவரத்து நேற்று நடைபெறவில்லை. இப்பாதையும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ளது. வன்னேரிக்குளம், அக்கராயன் குளம் என்பனவும் பெருக்கெடுத்துள்ளன. இதனால் நேற்று வாகனப் போக்குவரத்து மேற்கொள்ளமுடியாதளவுக்கு வெள்ளம் நிரம்பியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனைவிழுந்தான், 9ஆம் கட்டைப் பகுதி மக்கள் வெள்ளப்பாதிப்புக்கு உள்ளாகி இருபபதாகவும் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்த நிலையில் மக்கள் இடம்பெயர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மன்னாருக்கான போக்குவரத்து வீதிகள் அனைத்தும் துண்டிக்கப்பட்ட நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)


# குடிநீரின்றி அவலம்

அச்சுவேலி வல்வைப் பகுதி மக்கள் குடிநீரைப்பெற்றுக் கொள்வதில் பாரிய பிரச்சினைகளை எதிர் கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நிலாவரையில் இருந்து தேசிய நீர் ·வழங்கல் வடிகால் அமைப்பு சபையினால் வழங்கப்படும் நீர் போதாமையாக உள்ளதுடன் நீர் வழங்கும் அளவும் குறைவாக காணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சுமார் 300 குடும்பங்கள் வசிக்கும் இப்பகுதியில் 6 குடி நீர் தொட்டிகள் கட்டப்பட்டும் அதில் மூன்று தொட்டிகளுக்கே நீர் வழங்கப்படுவதாகவும் ஏனைய குடிநீர் தொட்டிகள் கவனிப்பாரற்று காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடிநீரைப்பெற்றுக்கொள்ள வல்வைச் சந்தியில் உள்ள இராணுவக்காவலரணில் உள்ள நீர்த் தாங்கியிலிருந்து பெற்றுக் கொள்வதாக தெரிவிக்கும் மக்கள் தமது பகுதிக்கான குடிநீர் விநியோகம் குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றனர். (15)

# பரமர் சங்கமம்



‘உண்ணாமல் கொள்ளாமல் அண்ணாமலைக்குக் கொடுக்கிறே’ண்டும் ஒரு பழமொழியுண்டு. இதனைப்பல வடிவில் கதை கட்டி விட்டதை அறிவோம்.

அரை நூற்றாண்டு முன்பாக வலிதெற்கு, சுதுமலையில் அண்ணாமலைப் பரியாரி எண்டொருவர் இருந்தார். இவர் பிரபல இலக்கியக்காரர் ஐ.சாந்தனின் பேரனுமாவார்.

சாப்பிடாமல் நோயாளியாகிக் கடைசியில் வைத்தியருக்குக் கொடுப்பதால் அண்ணாமலை என்ற அவரிடம் கொடுப்பதாக அந்தப் பழமொழி அமைந்ததாகவும் இன்னொன்று சிவபெருமானைக் குறிக்கும் பெயரதால் இந்தியாவில் உள்ள அண்ணாமலை கோவிலுக்கு நேர்த்திவைத்துப் போய் வருவதால் அதனைக் குறிப்பதாகவும் அந்தக் கதைகள் உலாவின.

இதேவேளை எங்களது சுதுமலைப்பரியாரி நோயாளரிடம் கறாராகப் பணம் பறிப்பவர் அல்லர்; இயண்டதை அதற்காக வைக்கப்பட்டிருந்த பெட்டகத்துள் போட்டு விட்டுப் போவார்கள். அதால் அப் பழமொழி தமிழக அண்ணாமலையை வைத்துத் தோன்றியதாகவும் கருதப்படுகிறது.

அதெதுவோ உண்ணாவிரதமெண்டால் உடனம் மகாத்மா காந்திதான் நினைவுக்கு வருவார். அவர்தான் இந்த அகிம்சாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தாரோ அவருக்கும் முன்பாக ஆரும் தொடங்கி வைத்தனரோ தெரியவில்லை.

இந்த அகிம்சாவழிப் போராட்டங்கள் ஈழத்தில் செல்வநாயகத்தால் தொடங்கப்பட்டதால் அவருக்கு ‘ஈழத்து காந்தி’ என்னும் அடைமொழிப் பட்டமும் புழக்கத்தில் இருந்தது.

யாழ். கச்சேரியடியிலும், கொழும்பு காலி முகத்திடலிலும் செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக்கட்சி உண்ணாவிரதங்களை மேற்கொண்டு புகழ் பெற்றது வரலாறு. அதன் தொடர்ச்சிதான் பூபதி, திலீபன் என்போரது சாகும்வரை உண்ணாவிரதங்கள்.

சாகும்வரை உண்ணாவிரதமென்கையில் தற்காலத்தில் சாகாதவரை உண்ணா விரதமும் தோற்றம் பெற்றுள்ளது. அதனைத் தொடக்கி வைத்த பெருமை முன்னதாகச் சிலர் இருந்தாலும் கலைஞர் கருணாநிதியே பெயர் பெற்றவர் என்றால் மிகையில்லை.


கருணாநிதி 2006 ஆம் ஆண்டளவில் இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக சென்னையில் சாகாதவரை இருந்த உண்ணா விரதம் சரித்திரப்பிரசித்தி பெற்றது. அதுபோல அதற்கு பின்பாகவும் வேறுசிலர் இருந்திருக்கலாம். கடந்த 10 ஆம் திகதி குருநகர் சேமக்காலை சந்தியில் ஒருவர் இறுதியாக சாகாதவரை உண்ணாவிரதம் இருந்து மூன்று நாட்களால் 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை முடித்துக் கொண்டார்.

இதேநேரம் வன்னிப் பெருநிலப்பரப்பின் பாராளுமன்ற தமிழ்த் தேசிய உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உண்ணாவிரதத்துக்கு பகிரங்க அறிவித்தல் விட்டுள்ளார்.

2013ஆம் ஆண்டுக்குள் தமிழர்களின் இனப்பிரச்சனைக்கு இலங்கை அரசால் தீர்வு வைக்கப்பாடாவிட்டால் சாகும்வரை உண்ணா விரதம் இருக்குப் போவதாக!

இதுவே தற்சமயம் உலகளாவிய நகைச்சுவையாகப் பலராலும் பேசப்பட்டு வருகிறது. அநேகமாக இதுவும் சாகாதவரை உண்ணா விரதமாகவே முடியுமென்பது பரமருடைய ஆரூடம் எதுக்கும் பொறுத்திருந்து பாப்பம் ...என்ன நான் சொல்லுறே!

# சங்கத்தின் செயற்பாடுகள் பொதுக்கூட்டத்தில் ஆராய்வு



(க்ரணவாய்)

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் சங்கத்தலைவர் கெ.செல்வராசா தலைமையில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.தயாளன் ஆகியோரும் கலந்து சங்கச் செயற்பாடுகள் பற்றிக் கருத்துரை வழங்கினர். மேலும் இக்கூட்டத்தில் வருடாந்தவரவு செலவு,உத்தேச வரவு செலவு, 2010-2011 கணக்காய்வு அறிக்கை ஆகியன பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, ஆராயப்பட்டு சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (18)

# குடிபோதையான தந்தையை பிடித்துக்கொடுத்தனர் பிள்ளைகள்

(சுன்னாகம்)

தினமும் மது அருந்திவிட்டு வந்து தங்களுடைய குடும்பத்தின் நிம்மதியை சீர்குலைத்த தந்தையை அவரது பிள்ளைகள் இருவர் பொலிஸில் பிடித்துக்கொடுத்த சம்பவமொன்று சுன்னாகம் மேற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நபரொருவர் தினமும் மது அருந்தி விட்டு வந்து தனது மனைவியுடன் சண்டையிடுவதுடன குடும்பத்தின் நிம்மதியையும் சீர்குலைத்துள்ளார்.

மேற்படி நபரின் இத்தகைய செயற்பாட்டினால் அவரது, சுமார், 10,12 வயது மதிக்கத்தக்க ஆண் பிள்ளைகள் இருவரும் மனைவியும் அச்சத்திற்குள்ளாகிய நிலையில் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த நத்தார் தினத்தன்று தனது வழமையான செயற்பாட்டில் ஈடுபட்ட இந்நபர் தொடர்பில் மேற்படி பிள்ளைகள் சுன்னாகம் பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

இந்நபர் வீட்டிற்கு வெளியில் கத்தியை பிடித்தவாறு கத்திக்கொண்டிருந்தபோது குறித்த பிள்ளைகளுடன் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அந்நபரை கைது செய்துள்ளனர்.

# 50 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு செய்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகள் இவ்வருடம் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு 23 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட உருளைக் கிழங்கு உற்பத்தி இந்த வருடம் 100 வீதத்திற்கு மேற்பட்ட அதிகரிப்புடன் சுமார் 50 ஹெக்ரேயரில் பயிரிடப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இந்த வருடம் உருளைக்கிழங்கு விதை 50 கிலோ நிறைகொண்ட பொதி ஒன்று 11 ஆயிரம் ரூபாவில் இருந்து 13 ஆயிரத்து 500 ரூபா வரையில் விற்பனையாகிறது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹெட்லைட்சோடா, கல்வைற், அனோவா, றெவறா இன உருளைக் கிழங்கு விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக் கிழங்கு தனிப்பட்ட சுவை உடையதாக இருப்பதால் நாடளாவிய ரீதியில் இதற்கு நல்ல மதிப்பு ஏற்பட்டுள்ளது.பெரும் பணச் செலவில் யாழ் .மாவட்ட விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ள போதிலும், அறுவடை செய்யப்படும் காலப் பகுதியில் வெளிநாட்டிலிருந்து இவை இறக்குமதி செய்யப்படுவதால் விற்பனை குறைவாக இருப்பதாக கவலையடைகின்றனர்.

# நாடக கலைஞர்களுக்கு பயிற்சிப்பட்டறை

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக் கழகத்தின் அரச நாடகக் குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் வட மாகாண தமிழ் நாடகத் தயாரிப்பாளர்கள், நாடகக்கலைஞர்கள் மற்றும் நாடகத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஒருநாள் பயிற்சிப் பட்டறை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மகிந்த சிந்தனையின் அரச கொள்கைக்கு அமைவாக வடக்கு தெற்கு கலாசார பரிமாற்றத்திட்டத்தின் கீழ் கலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் கலாசார மற்றும் சமூக ஒன்றிணைப்பு அமைச்சின் நிதி உதவியின் கீழ் இச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது. சிங்கள நாடக கலை நுட்பங்களை தமிழ் நாடகக் கலைஞர்களோடு பரிமாறிக் கொள்வதற்காகவும் தமிழ் நாடகக் கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும், அவர்களை புது ஆக்கத்திறன் கொண்டவர்களாக மாற்றக்கூடிய வகையில் கை கொடுத்து தமிழ் நாடகத்துறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டும் இந்தச் செயலமர்வு இரண்டாவது தடவையாக யாழில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



யாழ். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் பங்குதந்தை இராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இரத்ததான நிக்ழ்வில் யாழ். போதனாவைத்தியசாலை வைத்திய நிபுணர்களால் மக்கள் பரிசோதிக்கப்படுவதையும் இரத்ததானம் வழங்குவதையும் காணலாம். (105)

# மக்களின் முன்னேற்றத்திற்காக அரசியல் கலப்பின்றி பாடுபடவேண்டும்

## வன்னிமுன்னேற்றக்கழக செயலர் தெரிவிப்பு



(வவுனியா)

"அரசியல் கலப்பின்றி மக்களின் முன்னேற்றத்திற்காக அனைவரும் பாடுபடவேண்டும். அதுவே மக்களின் அனைத்து வளர்ச்சிக்கும் வழிசமைக்கும்" என வன்னி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளரும் பொதுச் செயலாளருமான சி.சிவசோதி தெரிவித்தார்.

வன்னி மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாக கொண்டு வன்னி மக்கள் முன்னேற்றக் கழகமொன்று வவுனியாவில் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

"ஊருக்கு ஒரு பட்டதாரியை உருவாக்குதல், வளவிலும் வீதியோரங்களிலும் மரங்களை நாட்டல், சிறந்த தலைமைத்துவத்தை இனம் காணல், கல்வி கலாசார விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், விளையாட்டுதுறை சார்ந்த வீரர்களை தேசிய மட்டத்தில் இனம் காட்டல், விவசாய விலங்கு வேளாண்மையை ஊக்குவிக்க செயற்றிட்டங்களை உருவாக்குதல், ஊழல், சமூகவிரோத செயல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் ஆகியவற்றை இனம் கண்டு உரிய முறையில் அணுகுதல், தேசிய முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தல், பிறப்பு, இறப்பு, பதிவு ஆளடையாள அட்டை, திருமண பதிவு, காணி உறுதிப்பத்திரம், தேர்தல் இடாப்பு பதிவு ஒழுங்குபடுத்த ஆலோசனை கொடுத்தல், ஏனைய மக்கள் சார்ந்த கழகங்கள் நிறுவனங்களுடன் ஒரு பொது உடன்பாட்டில் சேர்த்துக் கொள்ளல், வேலை வங்கிகளை தோற்றுவித்து பொருளாதார மையம் ஒன்றை உருவாக்குதல் என்ற நோக்கங்களை அடிப்படையாக கொண்டு இவ் அமைப்பினை உருவாக்குகின்றோம்" எனவும் தெரிவித்தார்.

இதன்போது பொதுச்சபை, மத்தியகுழு, நிர்வாகக்குழு என்பனவும் தெரிவுசெய்யப்பட்டிருந்தன.



மன்னாரில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் மழையினை அடுத்து மன்னார் வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் முகமாக மன்னார் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டுப் பிரிவு பணியாளர்கள் மன்னார் வைத்தியசாலை வளாகத்தினுள் புகையூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை காணலாம்.

# முற்கொடுப்பனவு அட்டை தனியார் பஸ்களில் அறிமுகம்

(கொழும்பு)

தனியார் பஸ்களில் பயணம் செல்வதற்காக டிக்கட்டிற்கு பதிலாக முற்கொடுப்பனவு அட்டை பயன்படுத்தும் புதிய நடை முறை ஜனவரி நடுப்பகுதி முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்தது. முற்கொடுப்பனவு அட்டை அறிமுகம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மொரட்டுவ மற்றும் ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களினூடாக முன்னெடுக்கப்பட்டதோடு இது தொடர்பான கொடுக்கல் வாங்கல் மத்திய வங்கியின் அனுமதியுள்ள வங்கி அல்லது நிதி நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொசான் குணவர்தன தெரிவித்தார்.

புதிய திட்டத்தினூடாக பஸ் உரிமையாளர்களும் பயணிகளும் நன்மையடைய உள்ளனர். பஸ் உரிமையாளர்களின் வருமானம் பாதுகாக்கப்படுவதோடு சாரதிகளும் நடத்துநர்களும் நிதி மோசடி செய்வது தடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். எஞ்சிய சில்லறை பணத்தை வழங்காத பிரச்சினை இனி எழாது எனவும் அவர் தெரிவித்தார்.

தொலைபேசி முற்கொடுப்பனவு அட்டைபோன்று இதனை பயன்படுத்த முடியும் எனவும் இந்த அட்டை மீளப்பயன்படுத்தக் கூடியது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# தேசிய பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமனம்

(கொழும்பு)

102 தேசிய பாடசாலைகளுக்கு புதிதாக அதிபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. புதிதாக அதிபர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் கோட்டாபய ஜயரட்ன தெரிவித்தார்.

அதிபர் தரம் ஒன்றில் உள்ளவர்களையே புதிதாக சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் நாளையுடன் நிறைவடையவுள்ளன. கடந்த காலங்களில் புதிதாக அதிபர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையில் தாமதம் நிலவியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 22 மத்திய நிலையங்களில் தலைமைத்துவப்பயிற்சி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் தலைமைத்துவ திறமை மற்றும் நல்ல சிந்தனையை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் தலைமைத்துவப்பயிற்சி நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வியமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இணைந்தே இந்த செயற்றிட்டத்தை முன்னெடுக்கின்றது.

தலைமைத்துவப்பயிற்சி இம்முறை மூன்று கட்டங்களாக 22 மத்திய நிலையங்களில் நடைபெறுகின்றது. முதல் கட்டமாக ஆயிரம் மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். இந்த பயிற்சி ஜனவரி மாதம் 12ஆம் திகதி வரை இரண்டுவாரங்களுக்கு அளிக்கப்படும்.

இரண்டாம் கட்டம் ஜனவரி மாதம் 16 ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வரை நடைபெறும். மூன்றாவது கட்டம் பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிவரை நடைபெறுமென உயர்க்கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்து பல்கலைகழகங்களுக்கு செல்வதற்கு தகுதியடைந்த மாணவர்களுக்கே இந்தப் பயிற்சியளிக்கப்படுகின்றது.

இவர்கள் 2012 ஆம் ஆண்டு பல்கலைகழகங்களுக்கு உள்ளீர்த்திருக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் வெட்டுப்புள்ளி பிரச்சினையினால் அவர்கள் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மன்னாரில் வெள்ளப்பெருக்கு 4229 குடும்பங்கள் இடப்பெயர்வு



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கின் காரணமாக 4229 குடும்பங்களைச் சேர்ந்த 17339 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஏ.சி.றியாஸ் தெரிவித்தார்.

மன்னார், நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 1307 குடும்பங்களைச்சேர்ந்த 4623 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 17 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் நகர்ப் பகுதியில் சாந்திபுரம், சௌத்பார், எமில் நகர், கோந்தைப்பிட்டி கிராமங்களும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

இதேவேளை மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் அமைந்துள்ள 2 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதன் காரணத்தினால் குறித்த கிராமத்தைச் சேர்ந்த 75 குடும்பங்கள் வெளியேறும் நிலையில் உள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தாளையடி, புதுக்குளம்,தேவன்பிட்டி ஆகிய கிராமமக்களும் வெளியேறி வருகின்றனர்.

தற்போது பரப்புக்கடந்தான் குளம் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளது.

நாயாற்று வழி வீதி முற்றாக பாதிப்படைந்துள்ளமையினால் குறித்த வீதியூடான போக்குவரத்துக்கள் பாதிப்படைந்துள்ளது.

இதேவேளை பாலியாறு, பறங்கியாறு, நாயாறு ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளமையினால் ஏ-32 வீதி மூடப்பட்டுள்ளது.

அத்துடன் மடு - பாலம் பிட்டி பிரதான வீதி, மன்னார் மதவாச்சி பிரதான வீதி, மடு-பெரிய தம்பனை பிரதான வீதி ஆகியவற்றின் போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டுள்ளது.

# குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மன்னார் ஆயரிடம் விசாரணை

(மன்னார்)

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மீது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. அவுஸ்ரேலியாவுக்கு படகு மூலம் சட்டவிரோதமாக செல்லும் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுதல் தொடர்பில் ஆயரினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பிலேயே அவரிடமிருந்து பல கோணங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

மன்னார் ஆயரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்வது இது முதல் தடவையல்ல. அவுஸ்ரேலியாவிலிருந்து அகதிகள் நாடுகடத்தப்படுதல் தொடர்பில் அவரினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பிலேயே அவரிடமிருந்து வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

## இரசாயனவியல்


ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

*கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான அலகுரீதியான குறிப்புக்களின் தொடர்ச்சி...*


### மூலக்கூற்றுச் சாலகங்கள்

சில மூலக்கூற்றுச் சாலகங்கள் ஒத்த மூலக்கூறுகளிலானவை. வேறு சில பல்லின மூலக்கூறுகளிலானவை. இராட்சத மூலக்கூறை உருவாக்கும் மூலக்கூறின் முனைவுத் தன்மைக்கேற்ப அவற்றை முனைவில் மூலக்கூற்று சாலகம், முனைவு மூலக்கூற்று சாலகமென வகைப்படுத்த முடியும்.

அயடின் பளிங்ககள் ஒத்த அணுக்களினாலான, முனைவில் மூலக்கூற்றுச் சாலகத்திற்கு உதாரணமாகும். இது ஒரு பாரிய மூலக்கூறாகும். ஆகவே பல்வேறு காரணங்களினால் அயடின் மூலக்கூறு தற்காலிகமாக தூண்டி இரு முனைவை உருவாக்குகின்றது. அவ்வாறான தூண்டிய இரு முனைவு, தூண்டிய இருமுனைவுகளுக்கிடையே ஏற்படும் கவர்ச்சி மூலம் அயடின் சாலகம் உருவாகியுள்ளது.




நீர் மூலக்கூறு முனைவுடைய மூலக்கூறாகும். பனிக்கட்டி பளிங்குகள் முனைவு மூலக்கூற்றுச் சாலகமொன்றுக்கான சிறந்த மேற்கோளாகும். நீர் மூலக்கூறின் - O - H பிணைப்புக்களால் நிலவும் நிலையான இரு முனைவு காரணமாக பனிக்கட்டி பளிங்குகளினுள் $H_2O$ மூலக்கூறுகள் மூலக்கூறுகளுக்கிடையிலான ஐதரசன் பிணைப்புக்களினால் பிணைப்புற்றுள்ளன.




### அயன் சாலகங்கள்

பெரும்பாலான அயன் சேர்வைகள் பளிங்குருவான கட்டமைப்புடன் கூடிய திண்மப் பொருட்களாக இயற்கையில் நிலவுகின்றன. இந்த பளிங்கு சாலகங்கள் உருவாகியிருப்பது எதிர்மாறான ஏற்றங்களுடன் கூடிய அயன்கள், வெளியில் திட்டவட்டமான கோலமொன்றின்படி அடுக்கப்பட்டு உருவாதலினாலாகும். மேற்படி எதிர் ஏற்றமுடைய அயன்களுக்கிடையே நிலை மின் கவர்ச்சி காணப்படும். சோடியங்குளோரைட்டு, அயன் சாலகமொன்றுக்கு சிறந்தொரு மேற்கோளாகும். ஒவ்வொரு $Na^+$ அயன்களும் அமைவதன் மூலம், சோடியம் குளோரைட்டு சாலகம் உருவாகியுள்ளது.




## அடிப்படை இரசாயனம்

### அலகுகள் (Units)

**பௌதீகக் கணியங்கள் இரண்டு வகைப்படும்**

1. அடிப்படைப் பௌதீகக் கணியம் (Basic Quantities)
2. வழி / துணை பௌதீகக் கணிய்ம் (Derived Quantities)

### அடிப்படைப் பௌதீகக் கணியம்

ஏனைய பௌதீகக் கணியங்களில் தங்கியிருக்காத பௌதீகக் கணியம் அடிப்படைப் பௌதீகக் கணியம் என அழைக்கப்படும். இவ்வாறான அடிப்படைப் பௌதீகக் கணியங்கள் ஏழு காணப்படுகின்றன அவையாவன.

| பௌதீகக் கணியத்தின் பெயர் | குறியீடு | SI அலகின் பெயர் | SI அலகின் குறியீடு |
|---|---|---|---|
| நீளம் | I | மீற்றர் | m |
| திணிவு | m | கிலோகிராம் | kg |
| நேரம் | t | செக்கன் | S |
| வெப்ப இயக்கவியல் வெப்பநிலை | T | கெல்வின் | K |
| மின்னோட்டம் | I | அம்பியர் | A |
| பதார்த்தத்தின் அளவு | n | மூல் | mol |
| ஒளிச்செறிவு | IV | கன்டலா | cd |

### வழி / துணை பௌதீகக் கணியம்

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட அடிப்படைப் பௌதீக கணியங்களின் இணைப்பினால் பெறப்பட்டது வழி / துணை பௌதீக கணியம் ஆகும். இவற்றுள் சில சிறப்புப் பெயர் கொண்ட SI அலகுகளையும் சில சிறப்புப்பெயர் அற்ற SI அலகுகளையும் கொண்டிருக்கும்.

**சிறப்புப்பெயர் அற்ற SI அலகுகள் கொண்ட வழி/ துணை பௌதீக கணியங்கள்**

| கணியம் | வரையறை/ சமன்பாடு | SI அலகு |
|---|---|---|
| பரப்பளவு | நீளம் x அகலம் | $m^2$ |
| கனவளவு | நீளம் x அகலம் x உயரம் | $m^3$ |
| வேகம் | இடப்பெயர்ச்சி / நேரம் | $m\ s^{-1}$ |
| ஆர்முடுகல் | வேக வித்தியாசம் / நேரம் | $m\ s^{-2}$ |
| அடர்த்தி | திணிவு / கனவளவு | $kg\ m^{-3}$ |
| உந்தம் | திணிவு x, வேகம் | $kg\ ms^{-1}$ |
| மூலர் திணிவு | திணிவு / பதார்த்தத்தின் அளவு | $kg\ mol^{-1}$ |
| செறிவு | பதார்த்தத்தின் அளவு / கனவளவு | $mol\ m^{-3}$ |

**சிறப்புப்பெயர் பெற்ற கொண்ட SI அலகுகள் கொண்ட வழி/ துணை பௌதீக கணியங்கள்**

| கணியம் | வரையறை/ சமன்பாடு | SI அலகின் சிறப்புபெயர் | குறியீடு | வேறு SI அலகு | அடிப்படை SI அலகு |
|---|---|---|---|---|---|
| விசை | திணிவு x ஆர்முடுகல் | நியூட்டன் | N | - | $kg\ ms^{-2}$ |
| அமுக்கம் | விசை / பரப்பளவு | பஸ்கால் | Pa | $Nm^{-2}$ | $kg\ m^{-1}s^{-2}$ |
| வேலை | விசைX இடப்பெயர்ச்சி | யூல் | J | Nm | $kg\ m^2\ s^{-2}$ |
| சக்தி | - | யூல் | J | Nm | $kg\ m^2\ s^{-2}$ |
| மீடிறன் | அதிர்வுகளின் எண்ணிக்கை / நேரம் | ஹேர்ட்சு | Hz | - | $s^{-1}$ |
| மின்னேற்றம் | மின்னோட்டம் x நேரம் | கூலோம் | C | - | A s |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மின் அழுத்தம் | $\frac{\text{வேலை}}{\text{ஏற்றம்}}$ | வோல்ற் | V | $JC^{-1}$ | $kg\ m^2\ s^{-3}\ A^{-1}$ |
| மின்தடை | $\frac{\text{அழுத்தம்}}{\text{மின்னோட்டம்}}$ | ஓம் | Ω | $VA^{-1}$ | $kg\ m^2\ s^{-2}\ A^{-1}$ |
| மின் கொள்ளளவு | $\frac{\text{ஏற்றம்}}{\text{அழுத்தம்}}$ | பரடே | F | $CV^{-1}$ | $As\ V^{-1}$ |
| வலு | $\frac{\text{வேலை}}{\text{நேரம்}}$ | வாற்று | W | $Js^{-1}$ | $kg\ m^2\ s^{-3}$ |
| மின் கடத்துவலு | $\frac{1}{\text{தடை}}$ | சீமென்ஸ் (Siemens) | S | | $\Omega^{-1}$ |

முக்கிய குறிப்பு:

அடிப்படைக் கணியங்களை வேறுபடுத்திக் காட்ட ஒவ்வொரு அடிப்படைக் கணியத்தின் SI அலகிற்குமிடையே சிறிய இடைவெளி விடப்படும்.

| பெருக்கல் காரணி | விகுதியின் பெயர் | | குறியீடு |
|---|---|---|---|
| $10^{18}$ | எக்சா | exa | E |
| $10^{15}$ | பெடா | Peta | P |
| $10^{12}$ | டெரா | tera | T |
| $10^{9}$ | கிகா | giga | G |
| $10^{6}$ | மெகா | mega | M |
| $10^{3}$ | கிலோ | kilo | k |
| $10^{2}$ | ஹெக்டோ | hecto | h |
| $10^{1}$ | டெகா | deca | da |
| $10^{-1}$ | டெசி | deci | d |
| $10^{-2}$ | சென்ரி | centi | c |
| $10^{-3}$ | மில்லி | milli | m |
| $10^{-6}$ | மைக்றோ | micro | μ |
| $10^{-9}$ | நனோ | nano | n |
| $10^{-12}$ | பிகோ | pico | p |
| $10^{-15}$ | பெம்ரோ | femto | f |
| $10^{-18}$ | அரோ | atto | a |

முக்கிய குறிப்பு:

யாதாயினும் ஒரு பௌதீக கணியத்தின் பெறுமானத்தை விகுதியுடன் சேர்த்து எழுதும்போது அதன் குறியீட்டை SI குறியீட்டுக்கு முன்னால் இடைவெளிவிடாது எழுதுதல் வேண்டும்.

உதாரணம் : செக்கனில் $\frac{1}{1000} = 1 \times 10^{-3}{}_{s} = 1ms$

மீற்றரில் $\frac{1}{100} = 1 \times 10^{-2}m = 1ms$

மீற்றர் $1000 = 1 \times 10^{-3}m = 1km$

பௌதீக கணியம் என்பது எண்பெறுமானமும் அலகும் சேர்ந்த ஒன்றாகும். எனவே அலகு இல்லாத எண் பெறுமானம் அர்த்தமற்றதாகும்.

பௌதீக கணியம் = எண்பெறுமானம் x அலகு

உதாரணம் : நீளம் 5 cm

## பொருளுடைய இலக்கம்
## (Significant Figure)

கணித்தலுக்கும், அளத்தலுக்குமிடையே வேறுபாடொன்றுள்ளது. கணித்தலைத் திட்டவட்டமாகச் செய்யமுடியும். அளத்தல் அண்ணளவான பெறுமானத்தை குறிப்பிடுதலாகும்.

குறிப்பிட்டுக்கூறும் யாதாயினும் ஒரு பௌதீக கணியத்தின் எண் பெறுமானத் திலடங்கும் கருத்துள்ள எண்களின் எண்ணிக்கை பொருளுடைய இலக்கம் எனப்படும்.

**பொருளுடைய இலக்கம் தொடர்பான சில விதிகள்**

1. பூச்சியத்தைக் கொண்டிராத இலக்கமொன்றில் உள்ள எல்லா எண்களும் பொருளுடையவை ஆகும்.
உதாரணம் : 2191979 → 7 s.f
14.11 → 4 s.f

2. பூச்சியமல்லாத ஏனைய எண்களிற்கிடையிலுள்ள எல்லாப் பூச்சியங்களும் பொருளுடையவை ஆகும்.
உதாரணம் : 24.042011 → 10 s.f
102.03004 → 4 s.f

3. தசமதானத்தைக்கொண்ட இலக்கங்களில் தசமத்திற்குப் பின்னுள்ள பூச்சியங்கள் பொருளுடையவை.
உதாரணம் : 1.0000 → 5 s.f
0.1000 → 4 s.f

4. தசமதானத்தைக்கொண்ட இலக்கங்களில் தசமத்திற்கு முன்னுள்ள பூச்சியங்கள் பொருளுடையவை அல்ல
உதாரணம்: 0.0012 → 2 s.f

5. இலக்கங்கள் விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டில் (நியம வடிவம்) குறிப்பிடு மிடத்து 10 இன் அடுக்குகள் பொருளுடையவை அல்ல.
உதாரணம்: 4.5 x 103 → 2 s.f

**பயிற்சிகள்**

1. பின்வரும் இலக்கங்களில் உள்ள பொருளுடைய இலக்கங்களின் எண்ணிக்கையினைச் சரியாகக் குறிப்பிடுக.

1) 1
2) 1002
3) 52000051
4) 4500
5) $4.500 \times 10^3$
6) $4.50 \times 10^3$
7) 0.0012
8) 0.02030
9) 0.0001000
10) 100. 02
11) 8.100
12) 120.030
13) 0.000

Ans
1) 1
2) 4
3) 8
4) Amb (திட்டவட்டமற்றது)
5) 4
6) 3
7) 2
8) 4
9) 4
10) 5
11) 4
12) 6
13) 3

**பொருளுடைய இலக்கங்களின் கூட்டலும் கழித்தலும்**

தரப்பட்ட இலக்கங்களில் உள்ள தசம தானங்களில் எது மிகக் குறைவானதோ அத் தசம தானத்திலேயே பெறப்படும் விடை கொடுக்கப்படுதல் வேண்டும்.

உதாரணம் 1 : 12.345678
+ 234.568
+ 0. 5
247.413678

விடை 247.4

உதாரணம் 2 : 13.8
1.005
123.2846
0.023
138.1126

விடை 138.1

**பொருளுடைய இலக்கங்களின் பெருக்கலும் வகுத்தலும்**

தரப்பட்ட இலக்கங்களின் பெருக்கல் அல்லது வகுத்தலின்போது தரப்பட்ட இலக்கங்களின் பொருளுடைய இலக்கங்களில் எது குறைவானதோ அப்பொருளுடைய் இலக்க எண்ணிக்கையிலேயே விடை கொடுக்கப்படுதல் வேண்டும்.

*உதாரணம் பெருக்கல்* 1. 10. 14 x 0.67 = 6.7938
விடை 6.8 (2. s.f)
2. 10.13 x 0.66 = 6.6858
விடை 6.7 (2 s.f)
3. 10.15 x 0.68 = 6.902
விடை 6.9 (2 s.f)

*வகுத்தல்* 1. $\frac{2.45 \times 1.478}{335.6} = 0.001078$ (4 s.f)

$\frac{2.55 \times 3.489}{289.4} = 3.07 \times 10^{-2}$ (3 s.f)

**பயிற்சி**

கீழ்வருவனவற்றின் விடைகளைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக.


1) 4503 + 34 90 + 550
2) 1.367 - 1.34
3) 6305 x 0.010
4) 6305 /0.010
5) 483 x 73.673

**விடைகள்**
1) 5090
2) 0.03
3) 63
4) $6.3 \times 10^5$
5) $2.27 \times 10^3$

(தொடரும்...)

ஒவ்வொரு சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அலகு ரீதியான மாதிரி வினாக்களும் விடைகளும் வெளிவரும்

# பொருளாதார வளர்ச்சியில் பீகார் குஜராத்தைப் பின்தள்ளியது



(புதுடில்லி)

பொருளாதார வளர்ச்சியில், குஜராத்தை பின்னுக்கு தள்ளி, முன்னேற்றம் அடைந்துள்ளது பீகார் மாநிலம். பாரதிய ஜனதாவை சேர்ந்த முதல்வர், நரேந்திர மோடி தலைமையிலான குஜராத் மாநிலம், அனைத்து மட்டத்திலும் வளர்சசி அடைந்துள்ளது என்ற, பொதுவான கருத்து நிலவுகிறது. ஆனால், மிகவும் பின்தங்கிய, சட்டம் - ஒழுங்கு அறவே இல்லாத, பீகார் மாநிலம் தான், 2010ஆம் ஆண்டில், பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்த மாநிலமாக விளங்குகிறது என்பதை, புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

திட்ட கமிஷன் வெளியிட்டுள்ள புள்ளி விபரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது கடந்த, 2001 - 2005ஆம் ஆண்டுகளில், 2.9 சதவீத பொருளாதார வளர்ச்சியுடன், மிகவும் பின்தங்கிய மாநிலமாக விளங்கிய பீகார், 2006 - 2010ஆம் ஆண்டுகளில், 10.9 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளது. இதன் மூலம், வேகமாக வளர்ச்சி அடைந்த மாநிலங்களில், பீகார் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

அதே நேரத்தில், 2001 - 2005ஆம் ஆண்டுகளில், மிக வேகமாக வளர்ச்சி அடைந்த மாநிலமாக, 11 சதவீத பொருளாதார வளர்ச்சி பெற்றிருந்த குஜராத், 2006 - 2010ஆம் ஆண்டுகளில், வீழ்ச்சி அடைந்து, 9.3 சதவீத பொருளாதார வளர்ச்சியை மட்டுமே பெற்றது. மேலும், அந்த கால கட்டத்தில், வேகமாக வளர்ச்சி அடைந்த, சத்தீஸ்கர், அரியானா, மகாராஷ்டிரா மற்றும் ஒரிசா மாநிலங்களை விட, குஜராத் பின்தங்கி இருந்தது. அது மட்டுமின்றி, 2006 - 2010இல், வளர்ச்சி அடைந்த, 17 மாநிலங்களில், குஜராத் மட்டும் தான், பொருளாதார வீழ்ச்சி அடைந்த மாநிலம் என்பதும் குறிப்பிடத்தக்கது இவ்வாறு, அந்த புள்ளி விவரம் தெரிவிக்கிறது.



டில்லியில் நடைபெற்ற, தேசிய வளர்ச்சி குழும கூட்டத்தில், குஜராத் முதல்வர் நரேந்திர மோடியுடன் அளவளாவும் மத்திய அமைச்சர்கள் சரத் பவார், அந்தோணி, சிதம்பரம் மற்றும் குலாம் நபி ஆசாத்.




# சிங்கப்பூரில் சிகிச்சைபெறும் மருத்துவ மாணவி கவலைக்கிடம்

(புதுடில்லி)



சிங்கப்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள டில்லி மருத்துவ மாணவி தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். டில்லியில் கடந்த 16ஆம் திகதி பாலியல் வன்கொடுமைக்கு ஆளான கல்லூரி மாணவி, நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் சிங்கப்பூரில் உள்ள மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

உதவிக்காக மாணவியுடன் சிங்கப்பூர் சென்ற இந்திய மருத்துவ உதவிக்குழுவினர் நேற்று நாடு திரும்பினர்.

அந்த மாணவியின் மருத்துவ சிகிச்சைக்கு ஆகும் செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்கும் என்று மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்துள்ளார். மேலும் சிங்கப்பூரில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்பு கொண்டு மாணவியின் உடல் நிலை குறித்து விசாரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

சிங் கப்பூர் வந்துள்ள அந்த மாணவியின் குடும்பத்தாருக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருவதாக இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நித்தியானந்தாவிடம் சென்றால் கவலைகள் போய்விடுமாம்

(சென்னை)

நாட்டில் எத்தனையோ சாமியார்கள் இருந்தாலும் நித்தியானந்தாவே என்னை கவர்ந்தார். அவரது போதனைகள் பிடித்தது. மனதுக்கு நிம்மதி தந்தது. அவரிடம் சென்றால் கவலைகள் போகும் என்று கூறியுள்ளார் நடிகை ரஞ்சிதா. நித்தியானந்தா குறித்தும், சிடி சர்ச்சை குறித்தும் ரஞ்சிதா ஒரு தொலைக்காட்சிக்கு சனலுக்குப் பேட்டி அளித்துள்ளார். அதில் தான் நித்தியானந்தாவுடன் இன்னும் நல்ல தொடர்பில் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

பேட்டியில் அவர் கூறியுள்ளதாவது, நித்தியானந்தாவையும் என்னையும் பற்றி வந்த சி.டி. போலியானது. அதை வெளியிடாமல் இருக்க ரூ.60 கோடி கேட்டார்கள். பணம் தராவிட்டால் விபசார வழக்கில் சிக்க வைப்பதாகவும் மிரட்டினர். அவர்களை சும்மா விடமாட்டேன். நீதிமன்றில் ஏற்றுவேன். சிறு வயதிலேயே எனக்கு ஆன்மீக ஈடுபாடு உண்டு. அதுவே நித்தியானந்தா ஆசிரமத்துக்கு செல்ல தூண்டியது. நடிகர், நடிகைகள் பலர் ஆன்மீகத்தில் ஈடுபாடு வைத்துள்ளனர். ரஜினிகாந்த் ஆன்மீகவாதியாக இருக்கிறார். நான் நித்தியானந்தா பக்தையாவதற்கு முன்பே நடிகர் விவேக் அவரிடம் சென்று வந்தார். நடிகர் சந்தானம், நடிகை கவுசல்யா போன்றோரும் ஆசிரமத்துக்கு அடிக்கடி வருகிறார்கள்.

எத்தனையோ சாமியார்கள் இருந்தாலும் நித்தியானந்தாவே என்னை கவர்ந்தார். அவரது போதனைகள் பிடித்தது. மனதுக்கு நிம்மதி தந்தது. அவரிடம் சென்றால் கவலைகள் போகும். சி.டி. விவகாரத்துக்கு பிறகு



முன்பைவிட அதிக பக்தர்கள் ஆசிரமத்துக்கு வருகிறார்கள். வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள் வருகிறார்கள். நித்தியானந்தா தற்போது வெளிநாடு சுற்றுப் பயணத்தில் இருக்கிறார். ஜனவரி 6ஆம் திகதி அவரது பிறந்தநாள் வருகிறது. அன்றைய தினம் திருவண்ணாமலையில் சிறப்பு பூஜைகள் நடக்கும் என்றார் ரஞ்சிதா.

# ஐயாயிரம் கோடிக்கு நவீன பீரங்கிகள் கொள்வனவு

சீன இராணுவ ஆயுத பலத்துக்கு சமமாக, இந்திய இராணுவத்துக்கு ரூ.5 ஆயிரம் கோடிக்கு அதிநவீன 3ஜி பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணைகள் (ஏ.டி.ஜி.எம்.) வெளிநாடுகளில் இருந்து வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆயுதங்கள் காலாட்படை மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட பிரிவுகளில் பயன்படுத்தப்பட உள்ளன. இந்த வகை ஆயுதங்கள், நிலப்பகுதி தாக்குதலுக்கு மிகவும் உகந்தனவாகும். பாகிஸ்தான் கூட பக்தார் ஷிகான் என்ற இரண்டாம் தலைமுறை ஏவுகணைகளை வைத்துள்ளது. இவை சீன ஏவுகணை மற்றும் பிரெஞ்ச் எரிக்ஸ் இவற்றை அடிப்படையாகக் கொண்டவை. இந்திய இராணுவத்தில் உள்ள 356 காலாட்படைப் பிரிவுகளையும் பலப்படுத்த, முதற்கட்டமாக சுமார் 2,000 லோஞ்சர்கள் மற்றும் 24,000 ஏவுகணைகள் தேவைப்படுகின்றன. இந்த ஆயுதக் கொள்முதலானது, 2017ஆம் ஆண்டில் 12ஆவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் முழுமையடையும் என்று, இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயுத விஷயத்தில் இந்தியாவுக்கு உதவ இஸ்ரேல் தயாராக இருக்கிறது. ஏற்கெனவே, இஸ்ரேல் தயாரிப்பு ஆயுதங்கள் இந்திய இராணுவ வசம் உள்ளன. இராணுவத்தின் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்ய இஸ்ரேல் தயாராக இருக்கிறது. ஆயுத விநியோகம் செய்வதுடன் அதன் தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொள்ளவும் இஸ்ரேல் முன்வந்துள்ளது. எனவே இராணுவத்தை மூன்றாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொண்டு, நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக, இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## கடல் எல்லை தாண்டும் பிரச்சினை

# சென்னை மாணவர் கண்டுபிடிப்பு தேசிய அளவில் அங்கீகாரம்

(புதுடில்லி)

கடல் எல்லை தாண்டி, மீன்பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினையை தவிர்க்க, சென்னையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களின் கண்டுபிடிப்புக்கு, தேசிய அளவில் விருது கிடைத்துள்ளது. கடல் எல்லை தாண்டி மீன்பிடிப்பதால், இந்திய மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவதும், மீன் வலைகள் அறுத்தெறியப்பட்டு, சுட்டுக் கொல்லப்படுவதும், தொடர்கதையாகி வருகிறது. இதை தவிர்க்க, சென்னை செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி மாணவர்கள் நவீன் நெல்சன் இருதயராஜ், பிரின்சி பெர்பச்சுவா ஆகியோர் இணைந்து, கடல் எல்லையை சுட்டி காட்டும் கருவியை கண்டுபிடித்துள்ளனர்.

இக்கருவி, மூன்று பாகங்களைக் கொண்டது. முதல் பாகத்தில் எல்.சி.டி. திரையும், இரண்டாம் பாகத்தில் ஜி.பி.எஸ்.ஆன்டனா மற்றும் ஜி.பி.எஸ்.கருவியும், மூன்றாம் பாகத்தில் எரிபொருள் தடுப்பு கருவியும் உள்ளது. ஜி.பி.எஸ். ஆன்டனா, செயற்கைக்கோளில் இருந்து தகவல் பெற்று, ஜி.பி.எஸ்.டிவைசிற்கு அனுப்பும். அதிலுள்ள திரையின் மூலம், கடல் எல்லையில் பயணிக்கும் இடத்தை தெரிந்து கொள்ள முடியும்.

எல்.சி.டி.திரையில் மூன்று நிறங்கள் உள்ளன. இதில், மஞ்சள் நிறம் வந்தால் பாதுகாப்பான பகுதி. பச்சை நிறம் மீன்பிடிக்க தகுந்த பகுதி. சிவப்பு நிறம் வந்தால் ஆபத்தான பகுதி என்று அர்த்தம்.

சிவப்பு நிறம் வந்தால், அபாய ஒலி எழும். அபாய ஒலியை கேட்டதும், படகை மீன்பிடி பகுதி அல்லது பாதுகாப்பான பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டும். இல்லையென்றால், கடல் எல்லையை நெருங்குவதற்குள், இன்ஜினுக்கு செல்லக் கூடிய எரிபொருளை, கருவியின் மூன்றாம் பாகம் நிறுத்திவிடும். இதனால், குறிப்பிட்ட கடல் எல்லையை தாண்டவே முடியாது.

இக்கண்டுபிடிப்பு, இண்டியன் நேஷனல் அகடமி ஆப் இன்ஜினியரிங் என்ற அமைப்பின் சார்பில் நடந்த, அகில இந்திய அளவிலான பொறியியல் கல்லூரி மாணவர்களின் கண்டுபிடிப்புகளுக்கான போட்டியில், சிறந்த கண்டுபிடிப்பு விருது பெற்றுள்ளது. வரும் ஒக்டோபரில், ஐதராபாத்தில் இப்பரிசு வழங்கப்படுகிறது.

இது குறிதது, விருது பெறும் மாணவர்கள், பத்திரி கைகளில் வந்த எங்கள் கண்டு பிடிப்பை பார்த்து, ஆந்திர மாநில மீன்வளத்துறை எங்களை அழைத்துப் பேசியது. ஆனால், தமிழர் நலனுக்காக நாங்கள் கண்டுபிடித்ததை யாருமே கண்டுகொள்ளாமல் இருப்பது, மிகுந்த வேதனை அளிக்கிறது, என்றனர்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# அமெரிக்க மருந்துகளுக்கு அனுமதி

# பெண் அமைச்சரின் பதவி பறிப்பு

## ஈரான் ஜனாதிபதி உத்தரவு



மருந்துப் பொருட்கள் மீது விலை உயர்வு அறிவித்த ஈரான் பெண் அமைச்சரை பதவி நீக்கம் செய்ய அந்நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.


ஈரான் ஜனாதிபதி முகமது அகமது நிஜாத்தின்(வயது 55) அமைச்சரவையில் ஒரே பெண் அமைச்சராக மெரீஷா வாஹில் தஸ்தர்டி உள்ளார்.

சுகாதாரத்துறை அமைச்சரான இவர், நாட்டில் மருந்துப் பொருட்கள் மீது விலை உயர்வை அறிவித்தும், 2.4 மில்லியன் டொலர் அளவுக்கு மேற்கத்திய மருந்துப்பொருட்கள் இறக்குமதி செய்யவும் உத்தரவிட்டார்.

இதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்புக் கிளம்பியதால், இவரது பதவி பறிக்கப்பட்டுள்ளது.

மேலும் அணுசோதனை செய்வதை அமெரிக்கா கடுமையாக எதிர்க்கும் நிலையில், அமெரிக்க மருந்துப் பொருட்கள் இறக்குமதிக்கும் அனுமதி வழங்கியதால் ஆத்திரமடைந்த ஜனாதிபதி இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

# முட்டைப் பந்தயம் உயிரைப் பறித்தது



நண்பர்கள் வைத்த பந்தயத்தில் போட்டி போட்டு, 28 முட்டைகள் சாப்பிட்ட வாலிபர் வயிற்று வலியால் துடித்து பலியானார்.


துனிசியா நாட்டின் எல்-பேட்டன் பகுதியை சேர்ந்தவர் தாவூ பட்னாசி(வயது 20).

இவர் தன் நண்பர்களிடம் வேக வைக்காத 30 முட்டைகளை ஒரே சமயத்தில், சாப்பிட்டு காண்பிப்பதாக பந்தயம் கட்டினார்.

இதற்கு நண்பர்கள் ஒப்புக் கொண்டதால் புயல் வேகத்தில் முட்டைகளை உடைத்து வாயில் . ஊற்றிக் கொண்டார்.

28 முட்டைகளை விழுங்கிய பட்னாசிக்கு அதற்கு மேல் சாப்பிட முடியவில்லை. ஒரு கட்டத்தில் அவருக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. இதையடுத்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால் வழியிலேயே அவர் இறந்து விட்டார்.

# அமெரிக்க பனிப்புயலில் உயிரிழப்பு அதிகரிப்பு



அமெரிக்காவின் வடகிழக்கு பிராந்தியத்தை ஊடறுத்து வீசிய பனிப்புயல் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்வடைந்துள்ளது.

நியூ இங்கிலண்ட் மாநிலங்களில் அதிகளவு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதுடன், இந்தப் பகுதிகளில் 30 சென்ரிமீற்றர் வரை பனிப்படலம் ஏற்பட்டுள்ளது.

பனிப்பொழிவு காரணமாக விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், அமெரிக்காவின் மத்திய பகுதியிலுள்ள வீதிகளின் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

பல இலட்சக்கணக்கான மக்கள் மின்சாரம் இன்றி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூளை வளர்ச்சி அற்றவர்களாக குழந்தைகளை மாற்றிய கூகுள்

(லண்டன்)

இன்றைய குழந்தைகளை இன்டர்நெட், குறிப்பாக கூகுள் மூளை வறட்சியுடையவர்களாக மாற்றி விட்டது. இது பெரும் வருத்தமாகவும் வேதனையாகவும் இருப்பதாக கூறியுள்ளார் பிரபல இங்கிலாந்து கண்டுபிடிப்பாளர் டிரெவர் பெய்லிஸ். 75வயதான பெய்லிஸ் பல கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரர். அதில் முக்கியமானது வைண்ட் அப் ரேடியோ. அவர் இன்றைய குழந்தைகளின் நிலை குறித்து ஆதங்கத்துடன் பேசியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,இன்றைய குழந்தைகள் செயற்திறன் பயிற்சியும், திறமையும் அற்றவர்களாக வளர்கின்றனர். எதையும் யோசித்துச் செய்யும் மன நிலையில் அவர்கள் இல்லை. இன்டர்நெட்டையே முழுமையாக சார்ந்திருக்கும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக கூகுளுக்கு அடிமையாகி விட்டனர். கூகுள் மூலம்தான் எதையும் தேடும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இது அவர்களது மூளை வளர்ச்சிக்கு பெரும் குந்தகமாக அமையும், மூளை வறட்சிக்கு வித்திடும். குழந்தைகள் எதையும் சிந்தித்து செயற்பட வேண்டும். அதற்கேற்ப அவர்களைப் பழக்க வேண்டும். மொபைல் போன், கணனி என்று எதற்கெடுத்தாலும் அதற்கு அடிமையாகியிருக்க கூடாது. ஆனால் இன்றுள்ள குழந்தைகள் அப்படியா இருக்கிறார்கள். அவர்களை நினைத்தாலே எதிர்காலத்தை நினைத்துப் பயமாக இருக்கிறது என்றார் பெய்லிஸ்



# ஒபாமாவின் மகளுக்கும் ஆண் நண்பர்களின் அழைப்பு



என்னுடைய மகளின் கையடக்க தொலைபேசிக்கும் அவளுடைய ஆண் நண்பர்களின் அழைப்பு வருகிறது, என அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.அமெரிக்க அதிபர் ஒபாமா, தன் குடும்பத்துடன், ஹவாய் தீவில், கிறிஸ்மஸ் விடுமுறையை கழித்தார். அப்போது, அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது;

என், 20 ஆண்டு மண வாழ்க்கையில், மற்றவர்களைப் போல ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. இக்கட்டான சமயங்களில், நாம் காட்டும் அன்பும், மரியாதையும், கணவன் மனைவிக்குள் இருக்கும் உறவை மேம்பட வைக்கிறது. என் மூத்த பெண், பெரியவளான பிறகு, அவளுக்கும் மொபைல் போன் கிடைத்து விட்டது. தற்போது, இந்த மொபைல் போனில் அவளுக்கு ஆண் நண்பர்களின் அழைப்பு வருகிறது. இருப்பினும் என் மகள்களுக்கு பெரிய அளவில் பொய் சொல்லத் தெரியாது.இவ்வாறு ஒபாமா கூறினார்.

ஒபாமாவின் மனைவி மிச்சேல் குறிப்பிடுகையில், "எனக்கு அரசியலில் ஆர்வம் கிடையாது. என் கணவரின் நடவடிக்கைகள் மூலம் அரசியலை தெரிந்து கொள்கிறேன்" என்றார்.

# 22 பாகிஸ்தான் படையினரை கடத்திய தலிபான்கள்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்திய தலிபான்கள் 22 பாகிஸ்தான் வீரர்களை சிறைபிடித்தனர். பாகிஸ்தானின் வடக்கே பெஷாவரில் நேற்று முன்தினம் மூன்று சோதனைச்சாவடிகள் மீது தலிபான்கள் திடீரென குண்டுகள் வீசி ,தாக்குதல் நடத்தினர். இதில் இரு பொலிஸார் பலியாயினர்,பின்னர் துப்பாக்கி முனையில் 22 இராணுவ வீரர்களை சிறைபிடித்து கடத்திச்சென்றனர். இது தொடர்பாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் கடத்தப்பட்ட வீரர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.





தென் கொரியாவின் சியோல் நகரில், கிறிஸ்மஸ் தினத்தையொட்டி சமூக நலக்கூடத்தில், உணவுகள் பரிமாறப்பட்டன. தென கொரியாவின் முதல் பெண் அதிபராக அண்மையில் தேர்வு செய்யப்பட்ட, பார்க் ஜியூன்-ஹீ, (நடுவில் உள்ளவர்)உணவு பரிமாறும் நிகழ்ச்சியில் பங்கேற்றதைக் காணலாம்

# 70 மில்லியன் ஆண்டுகள் பழமையான டைனோசர் எலும்புக்கூடு கடத்தல்



டைனோசர் எலும்புக்கூட்டை மங்கோலியாவிலிருந்து கடத்தி வந்த அமெரிக்கர் கைது செய்யப்பட்டதுடன் நியூயோர்க் நீதிமன்றத்தில் ஒப்டைக்கப்பட்டார்.

புளோரிடாவைச் சேர்ந்த எரிக் புரேக்கோப்பி(வயது 38) என்பவர் மங்கோலியாவிலிருந்து 70 மில்லியன் பழமையான டைனோசர் உட்பட புதைபடிவங்களை அமெரிக்காவிற்கு கடத்தி வந்துள்ளார்.

கடந்த யூன் மாதம் மங்கோலிய அரசு, தங்களிடமிருந்த டைனோசர் எலும்புக்கூடு திருடப்பட்டு விட்டதாக அறிவித்ததும் சர்வதேச காவல்துறை தேடுதல் வேட்டையை தொடங்கியது.

இந்நிலையில் கடத்தப்பட்ட பொருட்களை இணையத்தில் எரிக் ஏலம் விட்டபோது மாட்டிக்கொண்டார். அப்போது அவரை கைது செய்த பொலிசார், அவரிடமிருந்த புதைப்படிவங்களை கைப்பற்றியதுடன் நியூயோர்க் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். நீதிமன்றத்தில் டைனோசர் படிமங்களை தான் கடத்தியதாக எரிக் ஒப்புக்கொண்டார். தற்போது இந்த புதைபடிவங்களை அமெரிக்கா, மங்கோலியாவிடம் ஒப்படைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றது

# அமெரிக்க சனத்தொகை புத்தாண்டில் அதிகரிக்கும்

புத்தாண்டில் அமெரிக்காவின் சனத்தொகை 315.1 மில்லியனாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இவ்வாண்டு 2.3 மில்லியனால் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாக அமெரிக்க சனத்தொகை கணக்கெடுப்பு பிரிவு குறிப்பிடுகின்றது.

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் பின்னர் 6.3 மில்லியனால் சனத்தொகை உயர்வடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒவ்வொரு 8 செக்கனுக்கும் ஒரு பிறப்பும், 12 செக்கன்களுக்கு ஒரு இறப்பும் பதிவாகும் என அமெரிக்க சனத்தொகை கணக்கெடுப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# யாழ்.நாக விகாரை தமிழ்-சிங்கள உறவுப் பாலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்களுக்கும், நாகவிகாரைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. யுத்தச் சூழ் நிலைகளின் போது கூட நாக விகாரை பாதிக்கப்படவில்லை. நாகவிகான்ரக்குத் தேவையான வற்றை யாழ்.மக்களே செய்தார்கள் என்று நாகவிகாரையின் பிரதம குரு சிறிவிமல தேரர் தெரிவித்தார்.

நேற்று யாழ்.நாகவிகாரையின் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற தமிழ் பௌத்த சங்கத்தினால் நடத்தப்பட்ட ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மக்களுக்கும், நாகவிகாரைக்கும் இடையில் உள்ள இந்தத் தொடர்பு தமிழ்-சிங்கள மக்களிடையே ஒரு நல்ல உறவை ஏற்படுத்தும் பாலமாகவே உள்ளது.

எங்களது தமிழ்-பௌத்த சங்கம் நந்தாராம தமிழ்-பௌத்த அறநெறிப் பாடசாலை என்பனவற்றை நோக்கும் போது அது புரியும் எமது இந்தப் பொது நலன் சார்ந்த நிறுவனங்களுக்கு அரசிடம் இருந்தோ அல்லது வேறு யாரிடம் இருந்தோ நிதி பெறப்படுவதில்லை நன்கொடையாகக் கிடைக்கும் நிதியில் இருந்தே இந்த நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

எமது இந்த நிறுவனங்களைத் தவிர்த்து இந்து - பௌத்த கலாசார, மையம் என்றெல்லாம் பொது மக்களிடத்திலும் வேறு வழிகளிலும் நிதி வசூல் செய்து மோசடி செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறு மோசடியான நிறுவனங்களை நம்பவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்ட அவர் தமிழ்-பௌத்தம் என்பது பௌத்தத்திற்கு மாறிய தமிழர்கள் அல்ல அவர்கள் பௌத்தம் கற்கும் தமிழர்களே அதனால் அவர்கள் பௌத்தம் என்பது மதம் அல்ல என்பதனை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். பௌத்தம் என்பது ஒரு கொள்கை அந்தக் கொள்கையையே இந்து மதமும் சொல்கின்றது.

இந்த நிறுவனம் எதிர்காலத்தில் பெரிய நிறுவன மயமாகும் எனவும் நாகவிகாரை பிரதம குரு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தமிழ் பௌத்த சங்கத்தின் தலைவர் ரவிக்குமார், தமிழ் பௌத்த அறநெறிப் பாடசாலை மாணவ, மாணவிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(பா)

# சிறுமி மீது துஷ்பிரயோகம் சட்டத்தின் பிடியில் இளைஞர்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கிழக்குப் பகுதியில் 25 வயதுடைய இளைஞர் 15 வயதுடைய சிறுமி ஒருவரைக் காதலித்து துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய சம்பவமொன்றில் அந்த இளைஞர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜிப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் அவர் நடத்திய வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் குறித்த இளைஞர் சிறுமியைக் கடத்திச் சென்றே இந்த துஷ்பிரயோகத்தைப் புரிந்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த 20 ஆம் திகதி வட்டுக்கோட்டைப் பொலிஸில் சிறுமியின் பெற்றோரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதனை அடுத்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டு அவர் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, யாழ்.நகர்ப் பகுதியில் கஞ்சா விற்பனை செய்த இருவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது நீதிமன்ற வழக்குகளும் பதிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் இரத்ததான முகாம்கள் மூலமாக இரத்தம் சேகரிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு வழங்கப்பட்டதாகவும் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (பா)

## வெள்ளப்பாதிப்புக்கு...

வகையிலுமான வேலைத்திட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளது. இதற்காக அனைத்து அரச திணைக்களங்களையும் துரிதமாகச் செயற்படுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் திணைக்களத்தலைவர்களைக் கேட்டுள்ளார்.

வெள்ள அனர்த்தத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 4 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 663 பேர் இடம்பெயர்ந்து 22 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான உதவித் திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தும் முகமாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் திணைக்களத் தலைவர்களை உள்ளடக்கியதாக உயர்மட்டக் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

இதில் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு உடனடியாக உணவு நிவாரணங்களை வழங்குதல், நலன்புரி நிலையங்களில் தற்காலிக மலசல கூடங்களை அமைத்தல், தரை விரிப்புக்களை வழங்குதல், சமையல் உபகரணங்களை வழங்குதல் மற்றும் சுகாதார சேவையினரால் அங்கீகரிக்கப்பட்ட நுளம்பு வலைகளை வழங்குதல், சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையிலான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், தொற்றுநோயிலிருந்து மக்களை பாதுகாப்பது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்களும் மக்களுக்குச் சேவையினை வழங்குவதற்கான ஆளணிகளை ஒருங்கிணைத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

அத்தோடு, இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்ற நிலையில் நீரை வெளியேற்றும் போது மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடுமிடத்து அதிலிருந்து மக்களை பாதுகாப்பது தொடர்பான முன்னேற்பாடுகள் தொடர்பாகவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு பாதிப்புக்களை எதிர்கொள்ளும் பிரதேசமாக கருதப்பட்ட பகுதிகளை தொடர் கண்காணிப்பிற்குட்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீனிவாசன், உதவி அரசாங்க அதிபர்களான முகுந்தன், நாகேஸ்வரன், வசந்தகுமார் ஆகியோரும் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் கார்த்திகேயன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் சுகதாஸ், மீள்எழுச்சித்திட்டம் மற்றும் துரித மீட்சித்திட்டங்களின் பிரதித் திட்டப்பணிப்பாளர் விஜயகிருஷ்ணன், கிளிநொச்சி மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர் தயாறூபன், நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சுதாகரன், நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் விகிர்தன், கரைச்சி பிரதேசசபை செயலாளர் தவசோதி, பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் செயலாளர் சிவப்பிரகாசம், பிரதேச சபையின் சுகாதாரப் பரிசோதகர் சிவகுமார், மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் ஜெகானந்தன், சேவாலங்கா நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் றமணதாஸ் ஆகியோரும் மற்றும் மாவட்டத்தில் இயங்கும் ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகளும், துறைசார் பிரதிநிதிகளும் இந்த அவசர காலக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## புனர்வாழ்வு....

னரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் விரைவில் சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும், போர் நிறைவடைந்த சந்தர்ப்பத்தில் சரணடையாது பொதுமக்களுடன் கலந்த முன்னாள் புலி உறுப்பினர்கள் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். ஒப்பந்த அடிப்படையிலான கொலைகள், தாக்குதல்கள் உள்ளிட்ட பல்வேறு சமூக விரோதச் செயற்பாடுகளில் குறித்த புலி உறுப்பினர்கள் செயற்பட்டு வருவதாக* மேற்படி சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## காவடி...

ஈழத்துச் சிதம்பரம் நோக்கி பாற்காவடி எடுத்துச் சென்ற இவர் வழியில் மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக இவர் காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டவேளை இடை வழியில் மரணமடைந்துள்ளார். (50)

## முல்லையில்...

கப்பட்ட நிலையில் 355 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 100 பேர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

மேலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 899 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைத்துரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 338 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 63 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து மக்களும் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 197 குடும்பங்களைச் சேர்ந்த 670 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இங்குள்ள சகல மக்களும் வெள்ள அனர்த்தத்தால் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, 50 நலன்புரி நிலையங்களில் 2 ஆயிரத்து 728 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 66 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான உதவிகளை மேற்கொள்வதற்கு அவ்அவ் பிரிவு பிரதேச செயலகங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (04)

## கவனத்தை...

பொருளாதாரமும் முன்னேற்றம் கண்டு வருகின்றது. அத்துடன் எதிர்காலங்களிலும் குறித்த அமைச்சின் ஊடாகப் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு கிராமிய தொழிற்துறைகள் மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இதில் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொ ழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயற்திட்டங்கள் மற்றும் கண்காட்சியின் நோக்கம் தொடர்பிலான விளக்கவுரையினை அமைச்சின் செயலாளர் சிவஞான சோதி நிகழ்த்தினார்.

நிகழ்வில் உரையினை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா மற்றும் பிரதியமைச்சர் வீரகுமார திஸநாயக்க ஆகியோர் நிகழ்த்தினர்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்புச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, பனை அபிவிருத்திச் சபை மற்றும் வடகடல் நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புடன் நடைபெற்று வரும் இக்கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தையில் 185 இற்கும் அதிகமான விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியைப் பாடசாலை மாணவர்கள், தொழிற்துறை வல்லுனர்கள், ஆர்வலர்கள், மக்கள் எனப் பெருந்திரளானோர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்து காலை 10.00 முதல் இரவு 10.00 மணி வரை இக்கண்காட்சியினை பார்வையிடமுடியுமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முன்பதாக காட்சிக் கூடங்களை திறந்து வைத்த அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் அவற்றைப் பார்வையிட்டதுடன், அவை தொடர்பில் துறைசார்ந் தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்தும் கொண்டனர்.

இந்நிகழ்வில், கொழும்பு மாவட்ட அரச அதிபர் கமல் பத்மசிறி, மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத்ரவீந்திரா, நகர அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மகிந்த மகிவேவ, அமைச்சரின் ஆலோசகர் திருமதி ஜெகராஜசிங்கம், கனேடிய உயர்ஸ்தானிகராலய பிரதி உயர்ஸ்தானிகர் தெபர்ட் மக்லுகன், உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## படகு அகதிகள் மீது நீதிமன்றில் வழக்கு

அவுஸ்ரேலியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்கள் கட்டுநாயக்க் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சட்ட விரோதமான முறையில் படகு மூலம் குறித்த நபர்கள் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசித்துள்ளனர். இவ்வாறு பிரவேசித்த 46 பேரை அவுஸ்ரேலிய அரசாங்கம் விசேட விமானம் ஒன்றின் மூலம் நேற்று முன்தினம் நாடு கடத்தியிருந்தது.

அவர்கள் நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் 38 பேர் தலா ஐந்து இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அதன்படி இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். இவர்கள் மாத்தறை, காலி, எம்பிலிபிட்டிய, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்களாவர்.

## முடிவுக்கு...

களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் இந்த ஒரு மணி நேரப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதனை அடுத்தும் நோயாளர்களின் பாதிப்பைத் தவிர்க்கும் முகமாகவும் தாம் இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் சங்கத் தலைவர் வைத்தியர் நிமலன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து வைத்தியர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் காலை 8.00 மணி முதல் காலை 9.00 மணி வரை பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தமை தெரிந்ததே. (பா)

# சிவப்பு மழையின் மர்மம் என்ன?

## ஆராய்ச்சி நிபுணர் தரும் புதிய தகவல்

அண்மைக்காலமாக நாட்டின் பல இடங்களில் பெய்ததாகக் கூறப்படும் சிவப்பு மழையின் துளிகளில் அல்கா வகை உயிரினங்கள் காணப்பட்டதாக அது குறித்து ஆராய்ந்த இலங்கையின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை இயக்குனரான டாக்டர் அனில் சமரநாயக்காக் கூறியுள்ளார்.

அத்துடன், அவை அல்காக்களின் வகையை சேர்ந்ததாக தாம் அனுமானிக்கின்ற போதிலும் குறிப்பாக அவை எந்த வகையான அல்காக்கள் என்பதை தம்மால் கண்டறிய முடியாது இருப்பதாகக் கூறுகிறார்.

அந்த ஒருகல உயிர் அங்கிகள் மிகவும் கடினமான சூழ்நிலையில் கூட உயிவாழ்வனவாக இருப்பதுடன் பெருக்கமடையும் தன்மையையும் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார். இவை குறித்த தமது அனுமானங்களை உறுதிசெய்ய அவற்றை டி.என்.ஏ. மற்றும் ஆர்.என்.ஏ. சோதனைகளை செய்ய வேண்டியுள்ளதாகவும் டாக்டர் சமரநாயக்கா கூறினார்.

இது குறித்து ஏற்கனவே கேரளாவில் பெய்த சிவப்பு மழையை ஆராய்ந்த பிரிட்டனின் கார்டிவ் பல்கலைக்கழகம் ஆராய்ச்சிகளை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். இருந்த போதிலும், அவை மனிதனுக்கு ஏதாவது ஆபத்தை ஏற்படுத்துமா, இல்லையா என்பது குறித்து தாம் இன்னும் கண்டறியவில்லை என்றும் அவர் கூறினார்.

இதுவரை எவரும் அவற்றினால் இறந்ததாக அல்லது பாதிக்கப்பட்டதாக எமக்கு தகவல்கள் வரவில்லை, அதேநேரத்தில் இந்த அல்காவில் 1000 துணை வகைகள் இருக்கின்றன. அவற்றில் இது எந்த வகையைச் சேர்ந்தது என்பதை நாங்கள் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. ஆகவே எமது இறுதி முடிவுகள் வரும் வரை நாம் இவற்றால் பாதிப்பு ஏற்படுமா என்பதை கூறமுடியாது. ஆனால் எவரும் பாதிக்கப்பட்டதாக எமக்கு முறைப்பாடும் இதுவரை கிடைக்கவில்லை என டாக்டர் சமரநாயக்கா கூறினார்.

அதேவேளை, இந்த உயிர் அங்கிகள் குறித்த முழுமையான ஆய்வுகள் முடியும் வரை இவை குறித்து எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று மக்களுக்கு எந்தவிதமான அறிவுறுத்தல்களையும் தாம் கூற முடியாது உள்ளதாகவும் அவர் கூறினார். இது எப்படியான உயிர் அங்கி என்பதை முழுமையாக நாங்கள் கண்டறிந்த பின்னர்தான் இந்த சிவப்பு மழை ஏன் உருவாகின்றது, எப்படி உருவாகின்றது என்பன போன்ற விடயங்களையும் கண்டறிய முடியும் என்றும் டாக்டர் அனில் சமரநாயக்கா தெரிவித்தார்.

## மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் 31.12.2012 திங்கட்கிழமை, 02.01.2013 புதன்கிழமை மற்றும் 04.01.2013 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் 08.30 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரையும் மாவடிப் பிரதேசம், மூளாய் பிரதேசம் ஆகிய இடங்களிலும், 03.01.2013 வியாழக்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரையும் உரும்பிராய், ஊரெழுப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

# விலை அதிகரிக்கிறது சூளை எண்ணெய்க்கு

மின்சார சபை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படும் சூளை எண்ணெயின் விலையை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அதிகரிப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

அந்த வகையில், ஒரு லீற்றர் சூளை எண்ணெயின் விலை 25 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மின்சார உற்பத்தி மற்றும் பாரிய உலைகளை சூடேற்றுவதற்காக இந்த சூளை எண்ணெய் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இயற்கையின் சீற்றம் மாத்தளையில் அதிகம்

இலங்கையின் நடைமுறை சீரற்ற காலநிலையின் போது மாத்தளையில் நூறுக்கும் மேற்பட்ட இயற்கை மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

வெள்ளம், மண்சரிவு, புவியதிர்வு, உட்பட்ட பூமி புதைதல். போன்ற பல நிகழ்வுகளும் மாத்தளையில் ஏற்பட்டுள்ளன. இதனையடுத்து குறித்த மாற்றங்கள் தொடர்பில் ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


# மாணிக்கக்கல் சுரங்கத்தில் நச்சுவாயு கசிந்ததா?

(கொழும்பு)

நிவித்திகலையிலுள்ள மாணிகக்கல் சுரங்கமொன்றில் நேற்றுக் வெள்ளிக்கிழமை நச்சுவாயுக் கசிவு ஏற்பட்டுள்ளதால் மூவர் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, நச்சுவாயுவை நுகர்ந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# குறுக்கறுத்துப் பாய்கிறது வெள்ளம் முல்லையில் போக்குவரத்து முடக்கம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கியமான வீதிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நாயாற்றுப் பாலத்திற்கு மேலாக 5 அடிக்கு மேல் தண்ணீர் பாய்வதால் கொக்குளாய் முல்லைத்தீவுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதிக்கு படகு மூலமே போக்குவரத்து இடம்பெற்று வருகின்றது.

அதேபோன்று முல்லைத்தீவு நகரத்தையும், முள்ளியவளைப் பிரதேசத்தையும் இணைக்கும் மஞ்சள் பாலம் மழை வெள்ளத்தினால் உடைந்துள்ளதையடுத்து போக்குவரத்து படகு மூலமே நடைபெற்று வருகின்றது.

குறிப்பாக முள்ளியவளையில் இருந்து முல்லைத்தீவு நகருக்குச் செல்லும் பிரதான வீதி ஒட்டுசுட்டானிலிருந்து புதுக்குடியிருப்புக்குச் செல்லும் வீதி என்பன வெள்ளத்தினால் மூழ்கியிருப்பதனால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் வட்டுவாகல் பாலத்தில் 3 அடிக்கு மேல் நீர் ஓட்டம் காணப்படுவதாகவும் அங்கும் படகு மூலமே போக்குவரத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# பாகிஸ்தானுக்கு எதிரான 20 ஓவர் கிரிக்கெட் இந்தியா வெற்றி; தொடர் சமநிலை




(அகமதாபாத்)

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, 2 போட்டிகள் கொண்ட இருபது ஓவர் கிரிக் கெட் போட்டியில் விளையாடி வருகிறது. இதில், பெங்களூரில் நடந்த முதல் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. 2 ஆவது போட்டி அகமதாபாத்தில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இந்திய அணியில் அஸ்வின் சேர்க்கப்பட்டிருந்தார். பாகிஸ்தான் அணியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

கப்டன் டோனி 33 ரன்களில் உமர் குல் பந்தில் போல்டாகி பெவிலியன் திரும்பினார். இந்தியா 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 192 ரன்கள் எடுத்தது. ரெய்னா ஒரு ரன்னுடனும் ரோகித் சர்மா 4 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இதையடுத்து 193 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு, துவக்க வீரர்கள் உத்வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நசீர் ஜாம்ஷெட் 32 பந்துகளில் 41 ரன்களும், அகமது ஷேஜாத் 29 பந்துகளில் 31 ரன்களும் சேர்த்தனர். அடித்து ஆட வேண்டிய நெருக்கடியில், அவர்கள் விட்ட பணியைத் தொடர்ந்த உமர் அக்மல் விறுவிறுவென 24 ரன்களைத் தன் பங்கிற்கு சேர்த்தார்.

கடைசி ஓவரை இஷாந்த் சர்மா வீசினார். அந்த ஓவரில் 20 ரன்கள் தேவை என்ற நிலையில், 8 ரன்கள் மட்டுமே எடுத்தனர். இதனால் இந்தியா 11 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை சமன் செய்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக யுவராஜ் சிங் தேர்வு செய்யப்பட்டார். அடுத்தடுத்து இரண்டு போட்டிகளிலும் அரை சதம் அடித்த பாகிஸ்தான் கப்டன் முகமது ஹபீசுக்கு தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது.

# தாதியர் சேவைக்கு கலைப்பிரிவு மாணவர்கள்?

## வலுவடைகிறது எதிர்ப்பு

(கொழும்பு)

சா/த பரீட்சையில் சித்தியடையும் கிராமப் பகுதி மாணவர்களில 51 வீதமானோர் உயர்தரத்தில் கலை பிரிவையே தெரிவு செய்வதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

27 வீதமான கிராம பகுதி மாணவர்கள் வணிகப் பிரிவையும் 22 வ்தமானவர்கள் கணிதப் பிரிவையும் தெரிவு செய்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்படி நிலைமை உள்ளபோதும் தாதியர் சேவையில் கலை பிரிவு மாணவர்களை சேர்த்துக் கொள்ள சுகாதார அமைச்சு இணங்கியுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். ஆனால் தொழிற்சங்கங்கள் இத்திட்டத்தை எதிர்ப்பதாக அவர் கூறியுள்ளார். மஹிந்தோதய திட்டத்தின் கீழ் 1000 பாடசாலைகள் அமைக்கப் படவுள்ளதாக பந்துல குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் இபபாடசாலைகள் அமைக்கப்படும் என அவர் தெரிவித்தார். 2010 / 2011 வருடம் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு புலமை பரிசில் வழங்கும் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றபோதே அமைச்சர் இக்கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# தடையற்ற விநியோகம் பண்டிகைக்கால ஏற்பாடு

பண்டிகைக் காலங்களில், அத்தியாவசிய பொருட்களின் விலைகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் காணப்படுவதாக வர்த்தகதுறை அமைச்சு தெரிவித்துள்ளது. நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின்படி அரிசி, சீனி, மரக்கறி, மீன், கோழி இறைச்சி மற்றும் முட்டை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சம்பா அரிசி கிலோ ஒன்றின் விலை, 70 ரூபாவாகவும், நாட்டரிசி கிலோ ஒன்றின் விலை 60 ரூபாவாகவும் காணப்படுவதாகவும் நுகர்வோர் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. பருப்பு கிலோ ஒன்றின் விலை 133 ரூபாவாகவும், பெரிய வெண்காயத்தின் கிலோ ஒன்றின் விலை 126 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, வெள்ளைச் சீனி கிலோ ஒன்று 101 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும், நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. இதேவேளை, நாட்டின் பிரதான பொருளாதார மத்திய நிலையமான தம்புள்ளையில் மரக்கறிகளின் விலை குறைவாகக் காணப்படுவதாகவும் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமையாளர் கிரிஷ்டி விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அம்பகன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.